www.tamilarangam.net
தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்



பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம் வாய்ந்த ஆயுத மாகவே கரும்புலிகளை நான் உருவாக்கினேன். கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்பு காவலர்கள். எமது போராட்டப் பாதையின் தடை நீக்கிகள். எதிரியின் படை பலத்தை மன பலத்தால் தகர்த்தெறியும் நெருப்பு மனிதர்கள்.

— தமிழீழ தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்





அடுத்த இதழ்
ஈழத்தின் தலை சிறந்த
படைப்பாளிகளின்
கதைகளைத் தாங்கி
சிறுகதைச்
சிறப்பிதழாக
வெளிவருகின்றது.

# வெளிச்சம்

ஆடி- 1994
விலை- 20/-

## விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருமண வைபவத்துக்கேற்ற பட்டுப்புடவைகள்
ஆண்கள் பெண்களுக்கான
நவீன ஆடைத்தினுசுகள்
சிறுவருக்கான றெடிமேற் ஆடைகள்
இன்னும் இன்னும்
மங்களகரமான வைபவங்களுக்கு ஏற்ற
எல்லாவகை உடைகளையும் வழங்குகிறது


பே
ர
ர
சி
வ
ண்
ண
ச்
சோ
லை

# பேரரசி வண்ணச்சோலை

இல: 50, பெரியகடை
யாழ்ப்பாணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்று நடை தளர்ந்தும்
நரை விழுந்தும் தள்ளாடும்
ஐம்பது வருடங்களுக்கு முந்திய இளைஞர்களே!
வெள்ளைத் தோல் சீமான்கள்
வீடு திரும்ப முட்டை கட்டியபோது
நீங்கள் ஏன் ஊமையானீர்கள்?
தலைப்பாகை கட்டிய சந்தனப் பொட்டுகளை நம்பி
நீங்கள் ஏமாந்து போனீர்கள்.
மீண்டும் ஒரு இலையுதிர்வுக்குப் பின்னர்
புதிதாகத் தளிர்த்தெழுந்த
'ஐம்பத்தெட்டில்' அடிவாங்கிய தலைமுறையே!
தேசியச்சாயம் கரைந்து
சிங்களக் கொடியைப் பூச்சி அரித்தபோது
ஒட்டுப்போட ஊசி நூல் தேடி
நீங்கள் தோற்றுப் போனீர்கள்.
வழமையான அஸ்தமனத்துக்குப் பின்
கிழக்கில் புதிய உதயங்கள்
மண்ணின் தேவர்கள் மாலையும் கையுமாய்
விடுதலைக்குத் தாலிகட்ட விரைகின்றனர்.
பிஞ்சுப் பாதங்கள் நோகலாம்
பாரச் சிலுவை தோளை அழுத்தலாம்
நிழலற்ற நீண்ட பாலை யெனிலும்
அவர் பயணம் தொடரும்
நிழலற்ற பாதையல்லவா?
வாருங்கள்
அவர்களுக்குக் குடையாவது பிடிக்கலாம்.

— மாலிகா —

□□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெளிச்சம்

ஆடி - 1994
இதழ் - 27

எங்கள் மண்ணில் இன்றும் வசந்தம் வரத் தவறுவதில்லை. குண்டுவீச்சால் எம் மண்ணின் மரங்களில் கொம்புமுறிந்து போனாலும் மறுபக்கத்திலிருந்து குயில்கள் பாடத்தவறுவதில்லை.

கொடியேற்றம், தேர், திருச்சுருவம் சுற்றுதல், திருமண வைபவம், இலக்கிய விழாக்கள், இசை அரங்குகள் என்று எதுவுமே இங்கு இல்லாதழிந்துவிடவில்லை. எந்தக்கல்வி நிலையங்களின் கதவுகளிலும் பூட்டுகள் தொங்கவில்லை. தலையில் கைவைத்தபடி யாருமே இங்கு இடிந்துபோயிருக்கவில்லை இந்த மண்ணில் நின்றுபார்த்தவர்களுக்கு இது சொல்லாமலே புரியும்

புலம்பெயர்ந்து எம்மண்ணிலிருந்து என்றோ அன்னியமாகி விட்ட சில படைப்பாளிகளுக்குமட்டும் தமிழீழம் சிறைச்சாலையாகத் தெரிகிறது அதற்குக்காரணம், ஒரு காலத்தில் தாங்கள் கூறியதற்கு தாங்களே விசுவாசிகளாகவும் உண்மையானவர்களாகவும் இவர்கள் இருக்கத் தவறியதேயாகும்.

ஆயுதப் போராட்டம் என்றும் தேசிய இன விடுதலை என்றும் தமிழீழம் என்றும் விலங்குகளற்ற ஒரு புதிய பிரபஞ்சமென்றும் பேசி, எழுதிய சில எழுத்தாளர்களும் கவிஞர்களும் பின் தங்கள் தனிப்பட்ட பலகாரணங்களுக்காக எங்கெங்கோவெல்லாம் புலம்பெயர்ந்துவிட்டு, அங்கிருந்து தங்கள் தாயகம் தனிமைப் பட்டுவிட்டதென்றும், தாயகத்தில்வாழும் இலக்கியப் படைப்பாளிகள் சூழ்நிலையின் கைதிகளாகிவிட்டனர் என்றும் வாசகர் கடிதங்களில் தங்கள் வயிற்றெரிச்சலைக் கொட்டித் தீர்க்கத் தொடங்கியுள்ளனர்.

எழுத்துக்கும் வாழ்வுக்கும் என்றுமே தொடர்பில்லாத, உள்ளத்தில் உண்மை ஒளி என்றுமே இல்லாத, தாங்கள் எங்கிருந்தாலும் சார்ந்தவர்களுக்குள் தங்களைத் தலைவர்களாகக் கருதிக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொள்ளும் சிலர் இந்த மண்ணின் உண்மையான முகத்தை மறைத்து எம்மண்ணின் படைப்பாளிகளுக்கும் போராடும் எம் மக்களுக்கும், பத்திரிகைகளுக்கு எழுதும் கடிதங்கள் மூலம் கரிபூசலாம் என்று கருதுகிறார்கள். திட்டமிட்ட தடைகளால் உடனுக்குடன் உண்மைச் செய்திகளை வெளிக்கொணர முடியா எம்மண்ணின் நிலமை இவர்களுக்குச் சாதகமாக அமைந்து விடுகிறது.

இவர்களின் இந்த எழுத்துக்களும் பேச்சுக்களும் தாயகத்தைப் பிரிந்து பலவருடங்களாக தனிமைப்பட்டுவாழும் சிலரிடம் எடுபட்டுப்போகலாம். ஆனால், கடந்த இரண்டுமாதங்களின் முன் இங்கே கண்டு, பேசி, அளந்து, அறிந்து, விவாதித்துச் சென்ற தமிழகத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர் கோமல் சுவாமிநாதன் அவர்களுக்கு நிச்சயம் உண்மைநிலை தெரிந்திருக்கும். அப்படியிருந்தும் சுபமங்களாவில் இப்படியான கடிதங்களை ஏன் பிரசுரிக்கின்றார் என்பது இன்னமும் எமக்குப்புரியாத புதிராக இருக்கின்றது. ''எல்லோரையும் திருப்திப்படுத்த முயல்பவனால் இறுதியில் எவரையும் திருப்திப்படுத்த முடிவதில்லை'' என்ற பழமொழி இவருக்குத் தெரிந்திருக்கும் என்றே நம்புகின்றோம்.

□ □ □

வெளிச்சம் எமது மண்ணின் கலை, இலக்கிய முயற்சிகளில் மேலும் மேலும் வளர்நிலையைக் கொண்டுவரவேண்டுமென எண்ணங்கொண்டு, சிறுகதைச் சிறப்பிதழ், கவிதைச் சிறப்பிதழ், பெண்கள் சிறப்பிதம், வன்னிச்சிறப்பிதழ் என்று தொடராக வெளியிடத் தீர்மானித்துள்ளது. இவற்றுக்கான அறிவிப்புகளையும் செய்திருந்தோம். அத்துடன் பல எழுத்தாளர்களிடம் நேரடியாகவும் படைப்புகளுக்கு அணுகியிருந்தோம். நாம் அணுகியவர்களும் ஏனையோரும் இந்தக் காலத்துக்கான பணியாக இதை மனம் கொண்டு வெளிச்சத்தின் இந்த முயற்சிகளில் கூடியளவு பங்கேற்று ஒத்துழைக்கும்படி அன்புடன் கேட்கின்றோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துன்பங்கள் மத்தியிலும் [illegible] செயலாற்றிய [illegible]

பேராசிரியர் துரைராசாவிற்கு தேசியத் தலைவர் [illegible]



[illegible]

சான்றோரைப் போற்றுவதும் கற்றோரை கௌரவிப்பதும் தமிழர்களாகிய எமது மரபு. எமது சீரிய பண்பாடு.

பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு தலை சிறந்த கல்விமான். உலகப்புகழீட்டிய அறிஞர். ஆறு ஆண்டுகளாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராகப் பதவியிலிருந்து அவர் எமது மண்ணுக்கு ஆற்றிய சேவை மகத்தானது. அதற்காக ஈழத்தமிழ் உலகம் அவருக்கு என்றும் கடமைப்பட்டிருக்கும்.

பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு தேசப்பற்றாளர். அவர் இந்த மண்ணையும், மக்களையும் ஆழமாக நேசித்தார். அவரது வாழ்க்கை இந்த மண்ணோடு பிணைந்தது. மக்களோடு இணைந்தது. அவர் இந்த மண்ணினதும் மக்களதும் போராட்ட வாழ்வுடன் ஒன்றிணைந்து நின்றார் - போராட்ட வாழ்வின் பளுக்களைசுமந்துகொண்டார். போராடும் மக்களின் துன்பங்களை பகிர்ந்துகொண்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எத்தனையோ அவலங்கள், துன்பங்கள் மத்தியிலும், எதற்கும் அஞ்சாத துணிவுடன் இந்த மண்ணைப் பற்றிநிற்கும் எமது மக்களுக்கு பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு ஊக்க சக்தியாக விளங்கினார். தளர்ந்துபோகாத உறுதிப்பாட்டிற்கு ஒரு உன்னத உதாரணமாக விளங்கினார்.

எமது இனத்தின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் கல்வி ஆதாரமானது. எமது சமுகத்தின் முன்னேற்றத்துக்கு அடித்தளமானது. நீண்ட காலமாகவே எமது கல்வி வாழ்வை சிதைத்துவிட எதிரியானவன் முனைந்து வருகிறான். இதனால் தமிழரின் கல்வி பாரதூரமான அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது.

சரிந்து கொண்டிருக்கும் எமது கல்வித்துறையை நிமிர்த்திவிடவேண்டும் என்ற இலக்கில் பேராசிரியர் துரைராசா அவர்கள் அரும்பாடுபட்டார். எத்தனையோ இடையூறுகளுக்கும் மத்தியில் துணிந்து செயலாற்றினார். எதிரியின் போர் அழுத்தங்களாலும், அனர்த்தங்களாலும் யாழ்ப்பாண உயர்கல்விப் பீடம் செயலிழந்து போகாத வண்ணம் அவர் ஆற்றிய அருந்தொண்டு மிகவும் பாராட்டுக்குரியது. இது அவரது தேசப் பற்றிற்கும் மக்கள் நேயத்துக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.


பேராசிரியர் துரைராசா ஒரு எளிமையான மனிதர். ஒரு இனிமையான மனிதர். எளிமையும் இனிமையும் இணைந்த ஒரு நல்ல மனிதர்.

அறிவின் அதியுயர்ந்த பண்பாக பிறப்பதுதான் எளிமை. தன்னலமும், தற்பெருமையும் அகன்ற நற்பண்பாக எளிமை தோன்றுகிறது. இந்த எளிமை ஒருவரை அழகான மனிதராக, பண்பான மனிதராக ஆக்கிவிடுகிறது. இந்த வகையில் பேராசிரியர் துரைராசா ஒரு அழகான மனிதர் அவரிடமுள்ள இந்த அகத்தின் அழகுதான் மக்களைக் கவரும் மாண்பாக விளங்குகிறது.

(பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் நாட்டுப்பற்றுடன் எம் மண்ணுக்கு ஆற்றிய கல்விப்பணிக்கு தமிழீழ தேசியத்தலைவர் திரு வே. பிரபாகரன் அவர்கள் 03-04-94 அன்று விருதுவழங்கிக் கௌரவித்த நிகழ்வில் ஆற்றிய உரை)

www.tamilarangam.net






# வயல் வெளிப்பிள்ளையார் கோவிலின் நித்திய பூசையும் பத்து நாள் திருவிழாவும்

**புதுவை இரத்தினதுரை**

*எங்கள் சிறு ஊரின்*
*விரிந்த வயல் வெளியின் அந்தத்தில்*
*அந்தக் கோவில்.*
*வண்டிப் பாதை உண்டு*
*ஆனால்... சுற்றி வரவேண்டும்*
*ஒற்றை வரம்பே ஊருக்கு வசதி*
*வரம் கேட்டு வருவோர் மிகக்குறைவு*
*நேரே வருவதற்கு ஊருக்கு நேரம் கிடையாது.*
*மணிச்சத்தம் கேட்கும்*
*எட்ட இருந்து தலையில் குட்டிக் கொள்ளும்*
*பிள்ளையாரப்பா*
*ஒரு வார்த்தை உதிரும் அவ்வளவுதான்.*
*குருக்கள் வருவார்.*
*தெய்வத்துக்கு ஏதேனும்*
*தின்னக் கொடுத்துவிட்டு செல்வார்.*
*வாசலில் ஏறினால்.*
*வௌவால் புழுக்கை வாசமே வரவேற்கும்*
*மணி அடிக்க ஆளிராது*
*பலிபீடப் புக்கைக்காக இரண்டு காகங்கள்*
*நந்தியில் குந்தி இருக்கும்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பூசை முடியும்
வாசல் கதவில் பூட்டு விழும்
அடுத்த கோவிலுக்கு ஐயர் பறப்பார்.
தெய்வம் சிரிக்கும்
பூட்டிய கருவறைக்குள்
பிரபஞ்ச இயக்கத்தின் மையப்புள்ளி
போட்டபடி கிடக்கும்.
தினசரிகள் இப்படிக்கழிய
திருவிழாப் பட்சம் வரும்
ஊரெல்லாம் உயிர்ப்புக் கொள்ளும்
கோயில் வளவின் பற்றைகள் கொழுத்தப்படும்
காவிகலந்த சுண்ணாம்பு பூசி
வீதி மதிற்சுவர் பல்லைக் காட்டும்.
ஒரு வெள்ளிக்கிழமை
அகலக்கரை 'ஆந்திராவேட்டி' யும்
தோள்கள் சுமக்கும் சால்வையுமாக
எடுபிடிகள் இருபுறமும் இருக்க
தர்மகர்த்தா வண்டியில் வருவார்.
வெளிமண்டபத்தில் 'மஹா சபைக் கூட்டம்'
உபயகாரருக்குப் பூச்சரம் கொடுப்பதுடன்
கூட்டம் இனிதே நிறைவுறும்.
பிறகென்ன
கோயில் கொடியேறும்
கொடிமரம் இல்லாத கோவிலா
அதற்கென்ன
அலங்காரத் திருவிழா அமர்க்களப்படும்
சாத்துப்படி ஐயர்
எழுந்தருளிக்குப் புளிக்காப்புப் போட்டு
பொன்னாக்கி விடுவார்.
வடையும், மோதகமும் வாய்க்கு ருசியாகும்
புளிச்சாதப் பட்டையின்
தாழித வாசத்தில் உமிழ்நீர் ஊற்றெடுக்கும்
குருக்கள் அம்மாவின் கைராசி அப்படி.
ஊர்கூடித் தேரிழுக்கும்
இரவு
மின்விளக்குகள் கண்ணடிக்கும்
மேளமும் நாதஸ்வரமும்
இணுவிலில் இருந்து இறக்குமதியாகும்.

www.tamilarangam.net



'ஒட்டகத்தைக் கட்டிக்கோ...'
பாட்டுக்காரர் பாடத்தொடங்குவர்.
இளசுகள்
எதிர்ப்பால்க் காரரை
ஓரவிழியால் உண்ணத் தொடங்குவர்
'கற்பில் சிறந்தவள்
கண்ணகியா சீதையா'
பட்டிமண்டபத்தில்
மருத்துவப் பரிசோதனை நடக்கும்
'காஞ்சிபுரங்கள்' வாய்முத்துச் சிதற
பத்தினிகளின் சேலையுரிவதைப் பார்த்திருப்பார்.
கண்கள் மொய்க்கும் நேரம்
வில்லுப் பாட்டுத் தொடங்கும்
முடிய விடியும்.
அர்ச்சனைச் சில்லறையுடனும்
அண்டா, குண்டா, இட்லிச்சட்டியுடனும்
'மடப்பள்ளி' யிலிருந்து
குருக்கள் குடும்பம் வெளியேறும்.
மீண்டும்
வயல்வெளி சூனியப் பிரதேசமாகும்.
கலைந்துபோன வெளவால்கள்
கோயில் பண்டபத்தினுள் குடியேறும்
C - 90 மண்ணெண்ணெய்ச் சைக்கிளில்
குருக்கள் வந்து குதிப்பார்.
பத்து நிமிடத்தில் பூசைமுடியும்
தெய்வம் சிரிக்கும்
பூட்டிய அறைக்குள்
பிரபஞ்ச இயக்கத்தின் மையப்புள்ளி
போட்டபடி கிடக்கும். □□

வெளிச்சத்தில் தொடர்ந்து எழுதும்
பிரம்மஞானியின் கட்டுரை அடுத்த இதழில் இருந்து
மீண்டும் தொடரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





இரவு எட்டு மணியிருக்கும். களப்பங்கரையோரம், சவக்காலை ரோட்டில் திடீரென வெடித்த பேரொலியில் ஊர் ஒருதரம் ஊஞ்சலாடி வந்தது. பேரொலி அடங்குமுன் 'கரண்ட்லைன்' களும் கட்டாகி 'கும்' என்ற இருட்டு. இருளைக் கிழித்துக் கொண்டு ஊர் நாய்கள் போட்டசத்தம் மேலும் பீதியை நீட்டித்தது.

# ஊர் வேடம்

## கோளாவிலூர் கிங்ஸ்லி

சிறிது நேரத்தின் பின் முகாங்களுக்குமட்டும் ஒளிவந்தது. சவக்காலை ரோட்டிலிருந்து வந்த சிங்கள ஓலங்கள் மெய்சிலிர்க்க வைத்தன. ஊரில் அனேகம் பேருக்கு இதயத்துக்குள்ளேயே குண்டுவெடித்துவிட்ட பிரமை. அங்குமிங்கும் அமைந்திருந்த முகாங்களின் அதிரடிப்படை, அட்டகாசக் குரலெழுப்பி சம்பவஸ்தலத்துக்கு விரைந்தது.

''இதில் கோடாலியும் அகப்பட்டிருக்கக்கூடாதா'' என்ற பரிதவிப்பு சத்தம் கேட்டிருந்த அத்தனை மனித மனங்களிலும் நிச்சயமாக எழுந்திருக்கும்.

''விடிந்தால் ரவுண்டப்'' இது எதிர்பார்த்தவொன்றுதான்.

அதிகாலையிலேயே ரவுண்டப். நிலம் தெளிய விடிவதற்குள் ஊரை வடித்து கோயில் வீதியில் கொண்டு வந்தாயிற்று. எழுந்து விழித்தது விடியா மூஞ்சிகளில். இன்றைய 'முழுத்தம்' கோயில் முன்றலில் நிறையப் பேருக்கு பூசை பூசையாகக் கிடைத்தது. ஐயருக்கு இந்தத்தடவை அதிகமில்லை.

கோயில் முன்வீதியில் ராணுவ வாகனங்கள் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன. கடைசியாக வந்த ஜீப்பில் 'கோடாலி' வந்திருந்தான். இரவு சம்பவத்தில் அவன் அகப்படவில்லை. நான்காவது தடவையும் தப்பித்துவிட்டான். தற்செயலாக இரவு ஜீப்பில் வந்து மாட்டியவர்கள் சிறிசேன மாத்தையாவும், களுமல்லி மாத்தையாவும் இன்னுமிருவரோடு, பெண்டுகளுக்கெல்லாம் கண்டமாதிரி கையெறியும் ஒரு கறுப்பு உயர்ந்தவனும்.

கோடாலி கோயில் வீதிக்குள் வரவில்லை. எவரையும் விசாரிக்கவுமில்லை; அடிக்கவுமில்லை. இன்றும் இராணுவ உடையின்றியே வந்திருந்தான். வைத்த ''கிளேமொர்'' யாருக்கென்று அனேகமாக அவனுக்குத் தெரிந்திருக்கவேண்டும். இருந்தும் அமைதியாக ஜீப்பில் சாய்ந்தபடி நின்றிருந்தான். அவனுடைய கையிலும் இப்பொழுதெல்லாம் 'கோடாலி' இருப்பதில்லை.

□ □ □

கோடாலியின் சொந்தப்பெயர் வீரக்கோன் முனசிங்க. ஒரு சில வருடங்களுக்கு முன்பு கோடாலியும் கையுமாக மனிதவேட்டையாடித்திரிந்ததனால் அவனுக்கு கோடாலி என்றே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஊரில் பெயர். அழும் குழந்தைக்கு 'கோடாலி வாறான்!' என்றாலே போதும். வாயைப்பொத்திக் கொண்டு தாயைக் கவ்விக் கொள்ளும் குழந்தை. அப்படி. இப்பொழுது அவன் திருந்தி விட்டான். அல்லது இந்தப் போராட்டத்தின் யதார்த்த நிலையை உணர்ந்துவிட்டான். இப்படிக் கருதுவது எவ்வளவுக்கெவ்வளவு உண்மையோ தெரியாது. இருப்பினும் முன்பு ஒரு நாள், ஒரு இடத்தில், நூற்று முப்பத்தைந்து இளைஞர்களின் தலையை தன் கோடாலியால் வெட்டி சாக்கிலடைத்து தம்பட்டைக்களப்பில் தள்ளிவிட்டவன் இவன். அரசாங்கம் இவனுக்கு ஆக்கமும் ஊக்கமும் பதவியும் சலுகையுமென்று வழங்கி மகிழ்வித்தது. உலகப்பார்வை இங்கு செல்லுபடியாகவில்லை.

இப்பொழுது மட்டும் ஒன்றும் ஆகவில்லை. அவனுக்கு எதுவித தடையுமில்லை. அவன்தான் ஏனோ கோடாலியை தூக்கவில்லை. ஒருவேளை இனவெறி என்ற பசி அவனுக்கு அடங்கியிருக்கலாம். வேறு, துடிக்கப்பதைக்க கொலைத் தொழிலை வருடக்கணக்கில் செய்வதில் மனச்சலிப்பு அல்லது விரக்தி ஏற்பட்டிருந்தால் அது ஏதோ செயல். இவைகளைவிட கோடாலி, காலியில் கலியாணம் வேறு செய்திருக்கிறானாம். கற்பிணியாகவிருக்கும் அவனுடைய மனைவி, தனது சிசுவில் ஆணையிட்டு சத்தியம் வேண்டியிருக்கிறாளாம்; உயிர்க்கொலை செய்யக் கூடாதென்று. உயிர், தமிழ்பேசினால் அவசரகால விதி, தலைவிதியாகி விடும் என்பது வேறுவிடயம். கைக் கோடாலியையும் கையோடு வேண்டி விட்டாளாமவள். இப்படி ஊர்க்கதை உலாவியது. கதை உண்மையாகவிருந்தால் அவள்மனதுக்குள் புத்தர்தான் புகுந்திருக்கவேண்டும். ஆனாலும் விடயம் பிக்குவிற்கு தெரியவே கூடாது.

□ □ □

''அடிவிழுந்ததெல்லாம் ஈசனைக் கேட்டுக் கேட்டுத்தான். ஈசனை எப்படியாவது காட்டித்தராவிட்டால் எவரும் ஊரில் இருக்கமுடியாதாம். இரவு கூட தங்களில் ஐவருக்கு யமனான வன் இந்த ஈசன்தானாம்'.

நல்லகாலம் ஊர்க்கோயில் அம்மன் கோயிலாய்ப் போனது, சிவன்கோயிலாய் இருந்திருந்தால், ''ஈசன் எங்கே இறிக்கி'' என்று கேட்டு விழுகிற உதையின் உறைப்பில் சிலர் கோயிலையே காட்டினாலும் காட்டிவிடுவார்கள். கோயிலைக் காட்டினால் நிலைமை தலைகீழ். தற்பொழுது கோயில் மூலத்தானத்திற்குள் ஈசன் இருப்பது கணேஸ்வர ஐயருக்கும் பூபாலபிள்ளை வாத்தியாருக்கும் தெரியும். பூபாலபிள்ளை வாத்தியாரை விசாரித்த ஒ.ஐ.சி ''ஈசன் தெரியும்?'' என்று கேட்டபோது, ''ஓம் சேர் நல்லாவே தெரியும், ஆனா அவர் இப்ப எங்கே இருக்கிறாரென்று தெரியாது. ஆளைக்கண்டால் உங்களுக்கு உடனேயே தகவல் தருவேன்''. அவர் சுத்தமாகக்கூறினார். ''சத்தியம் சொல்லு'' என்று ஒ.ஐ.சி ஆணித்தரமாகக் கேட்க, ''சத்தியமாகத்தான் சேர்'' வாத்தியார் கூறித்தப்பித்தார். கோயிலையும் சும்மா பார்த்துக்கொண்டார். பிறிதொரு இடத்தில் ஒரு சிறுவனை வளைத்து நின்ற அதிரடிச்சிப்பாய்கள், ஆளுக்கொரு கேள்வி கேட்டு உருட்டியெடுத்தார்கள். 'அண்ணன் LTT' என்று உறுக்கினான் ஒருவன்.- ''இல்லை மாத்தையா அண்ணனை கோடாலி மாத்தையாதான் வெட்டிப்போட்டார்'' சிறுவன் பதில்சொன்னான். ஒருவன் 'நீ LTT போறது' எனக்கேட்டான். ''இல்லை இல்லை''- சிறுவன் ''பொய் சொல்லவாணா மல்லி'' என்று அவனே மீண்டும் அன்புத்தோரணையில் கேட்க,

www.tamilarangam.net



மீண்டும் சிறுவன் 'இல்லையில்லை' என்றான். இன்னொருவன் ''LTT லொக் காபெர் என்னா''. என்று தெரியாத மாதிரி கேட்டான். ''வே. பிரபாகரன்'' என்று சிறுவன் அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட, அடுத்துநின்ற சிப்பாய் ''இன்ன சொல்லு இன்னசொல்லு'' என்றான், தனது நாக்கில் வராத பெயரை அந்தச் சிறுவன் உச்சரித்தவிதம், ஆவலாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது அவனுக்கு. சிறுவன் 'வே. பிரபாகரன்' என்று மறு தாலும் அச்சில் வார்த்தான். ''மல்லி உம்மெய் சொல்றது நல்லங்நல்லங்'' என்றுக் கூறிகலைத்தனர் சிப்பாய்கள்.

விசாரணைகள் நேரத்தைக் கடத்தியதே தவிர ஆக்கபூர்வமான தகவல்கள் ஒன்றையும் தரவில்லை. விசாரணைகளை நிறுத்திவிட்டு ஊர்ச்சனங்கள் அனைவரையும் வம்மி மரங்களுக்கு கீழ் அமரவைத்து கூட்டம் ஆரம்பமானது.

கூட்டத்தில் ஒ.ஐ.சி மாத்தையா பேசினார். தமிழில் ஒருவரால் மொழி பெயர்க்கப்பட்டது. ''ஈழம் வேண்டுமென்று போராடிய அனைத்துக் குழுக்களும் எம்மோடு மோதமுடியாதென்று வந்து சரணடைந்து விட்டார்கள்''. உதாரணத்திற்குபக்கத்தில்நின்ற இரு தேசவிரோதிகளை கை நீட்டிக் காட்டினார். ''LTTE மட்டும் தான் அர்த்தமில்லாமல். அதுவும் மட்டக்களப்புக் காட்டிலும் யாழ்ப்பாணத்தில் ஒரு சில இடங்களிலும் இருந்து கொண்டு எம்மோடு மோதுகிறார்கள். இந்த வருடமுடிவிற்குள் அவர்களின் கதையும்சரி. வருகிற சனாதிபதித் தேர்தல் நாடு பூராவும்தான் நடக்கும். எனவே LTTEஐ நம்பி எம்மால் வீணாகச் சாகாதீர்கள். ஈசனை நீங்கள் ஆதரிப்பதால்தான் அவன் ஊருக்குள் வருகிறான். அண்மையில் LTTE இன் மாவீரர் நாளன்று கூட நாம் ஈசனை எதிர் பார்த்து சில முக்கிய இடங்களில் காத்திருந்தோம். ஈசன்வரவில்லை. ஆயினும் நடு ஊருக்குள் சோடனைகள் கட்டப்பட்டு, சுவரொட்டிகள் ஒட்டப் பட்டு இருந்தன. இவற்றை யார் செய்தது? பேய்வந்ததா? இந்தச்சேட்டைகள் இனி நடந்தால் துப்பாக்கிதான் பதில் சொல்லும்; மிகவும் கவனம்! மீண்டும் கூறுகிறேன் ஈசனைப்பற்றி தகவல்கள் தருபவர்கட்கு தேவையான பணம் தருவோம். சிறிதும் பயப்படத் தேவையில்லை. எதற்கும் நாமிருக்கிறோம். நாம் பெயரைதையும் வெளியிடமாட்டோம். ''ஒ.ஐ.சி இன் பேச்சும் உபதேசமும் தொடர்ந்தது......

ஈசனுக்கு ஒ.ஐ.சி பேசுவது தெளிவாகக் கேட்டது. சத்தமிட்டுச்சிரிக்க வேண்டும்போல் இருந்தது. சிரித்தால் அவ்வளவுதான். மேலும் பேசுவதை அவதானித்துக் கொண்டிருந்தான் அவன். அந்த இருட்டறை இதமாக இருந்தது அவனுக்கு. அதில் இருந்து விடுபட்டு ஒருதரம் எழும்பமுயன்று பார்த்தான். இடதுகால் நெருநருவென்று சிறிதும் அசைக்கமுடிய வில்லை ஒரு 'பீஸ்' வசமாகத்தாக்கி சிக்கலுடைவை ஏற்படுத்திவிட்டது.

இரவு ஈசனோடு வந்திருந்த மற்றப் போராளி, இரவு போய் குறிப்பிட்ட அந்த இடத்தில் சேர்ந்து ஈசனுக்காக அரைமணி நேரம் காத்திருந்திருப்பான். ஈசன் வராதுபோனதால் ஆபத்து என்பது தான் தீர்மானம். அவன் மற்றொரு குறிப்பிட்ட இடத்திற்கு போய்விட வேண்டும். அவன்மனம் இருப்புக்கொள்ளாது. இன்றிரவுக்கு எப்படியாவது ஈசனின் தொடர்பைப்பெற மீண்டும் வருவான்.

மூலத்தானத்தில் வீசிய சந்தன மணம் புத்துணர்வைத் தந்தது. ஈசன் சிறிது சாய்ந்து படுத்திருந்தான். முன்பெல்லாம் கோயில் வளவிற்குள்ளேயே விளையாட விடமாட்டார் ஐயர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்று கோயில் மூலத்தானத்திற்குள் கொண்டு வந்து விட்டிருக்கிறார். ஈசன் சிந்தித்துப் பார்த்தான். இரவு, ஊர் ஆழ்ந்து அயர்ந்து கிடந்த நேரம். ஐயர் வீட்டிற்கு வந்து சேர்ந்ததே பெரும் பாடானது. 'நான் ஈசன் வந்திருக்கேன், ஈசன் வந்திருக்கேன்' என பல முறை கூறியும் ஐயர் ஈசனுக்கு 'இங்கு இடமில்லை' என்று மொத்தமாக கூறிவிட்டார். இது ஏதோ சதி என்பது அவர் எண்ணம். பின்பு அவர் மகன்தான் ''ஈசன் மாமா'' தான் எனக்கூறிகுரலை மதித்தான் ஐயர் கதவைத்திறந்து வந்து பார்த்த உடன் அதிர்ந்து போனார். ஈசன் ரத்தக் காயத்துடன் சோர்வுற்றுக்கிடந்தான். காயத்திற்கு மருந்து கட்டுவதென்பது சாத்தியமற்ற விடயம் - இருப்பினும் நாளைய சுற்றிவளைப்பில் இருந்து எப்படியும் காப்பாற்றவேண்டும். ஊரில் எஸ். ரி. எவ். கிண்டாத இடமுமில்லை கிளறாத இடமுமில்லை. இப்படியிருக்க ஈசனை, ''எங்கு...''- சிந்தித்தவர் ''கடவுளே'' என்றபோது ஞாபகம் வந்தது- அவர் பூசை செய்கின்ற கோயில் தான். இதனால், கடவுள் தந்த இடம் தான் கோயில் என்று ஒரே முடிவாக கோயில் மூலத்தானத்தில் கொண்டு வந்து விட்டு விட்டார். இங்கு அவன் நிச்சயம் காப்பாற்றப்படுவான் என்பதில் கணேஸ்வர ஐயருக்கு அதிக நம்பிக்கை. மேலும் கோயிலை சோதனையிட ராணுவத்திற்கு சட்டமில்லையோ இருக்கோ, அவர்கள் கோயிலை சந்தேகமிட மறந்ததனால் வழமையாக விட்டுவைத்தார்கள்.

□ □ □

போன வெள்ளியன்று இரவு நடந்த ஒரு சம்பவத்தில் ஈசன் செத்து விட்டான் என்ற செய்தி ஊர் முழுவதும் பரவியிருந்தது. இரவுநடந்த சம்பவம் அதை பொய்யாக்கிற்று. அன்று நள்ளிரவிருக்கும் தனியாளாகவே ஊருக்குள் வந்திருந்தான் ஈசன். ஊரில் ''கால், அரைக்கால்'' என்று சேர்த்து வைத்துக் கொடுத்த பொருட்களுள் சிலவற்றைப்பெற்றுக் கொண்டு, வேறு சில அலுவல்களையும் முடித்துக் கொண்டு புறப்படுகின்றான். ஒரு மைல்வரை நடந்திருப்பான்; ஊர் கழிந்து, சேறும் சகதியுமாக தில்லை ஆறு வருகின்றது. கையில் இருந்தசாமான்களைத் தூக்கித் தலையில் வைத்து, துப்பாக்கியையும் சீராகக் கொழுவி விட்டு ஆற்றைக்கடப்பதற்கு நடையிலேயே தயாராகிறான். 'சடக்' என்ற சின்னச்சத்தம் நடையை நிறுத்தியது. அது .. துப்பாக்கி சுடு நிலைக்கு வந்த சத்தம்?! 'திக்' என்றது. நிதானமாக நின்று பார்வையை இருளுக்குள் புதைத்தான். திடீரென அடித்த போக்கஸ்லைற்றுடன் தாக்குதலும் துவங்கிற்று. போக்கஸ்லைற்றில் சூரியன் தோற்றுவிடும். ஒலியும் ஒளியும் திடீர் அதிரடி. ஈசன் மின் வெட்டியது போல் விறுக்கென்று ஆற்றுக்குள் பாய்ந்தவன் ஆளில்லை. ஓட்டம் மிகவும் மந்தமாகவுள்ள, சல்வீனியாப்புல்லும் ஆற்றுவாளையும் மூடிப்பரந்த ஆறு, தில்லையாறு. ஆற்றுக்குள் எஸ். ரி. எவ் இறங்கவில்லை. முதலையென்றால் அவர்களுக்கு கிலி. ஆயினும் ஏற்கனவேயே அக்கரையிலும் சில அணிகள் விடப்பட்டிருந்தன. விடியவிடிய அந்த இடத்தை விட்டு நகரவில்லை எஸ். ரி. எவ். ஆற்றுக்குள் அகப்பட்ட ஈசனுக்கு வெடிபிடித்திருக்கலாம் அன்றி முதலை பிடித்துவிடும் அதிலும் தப்பி இருத்தானாயின் விடிந்தவுடன் ஆளைப்பதம் பார்க்கலாம். இதுதான் அவர்கள் ஊகம்.

வீடிநிலவு எழப்போகிறது. ஈசன் மிகலாவகமாக சிறிது தூரம் நகர்ந்திருந்தான். தலையை சற்று உயர்த்தி கரையைப்பார்த்து கடக்க முயன்றான். முடியவில்லை. விடிந்தால் அவனுக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சாவுதான், அதிலும் ஒரு நம்பிக்கை. அதற்கிடையில் கூதல் கொன்றுவிடப் பார்த்தது.

விடிந்துவிட்டது.

ஈசன் இல்லவே இல்லை. வெறும் ஊகத்தை வைத்தும் உறுதிப்படுத்தி விடமுடியாது. தனது அடுத்த வலையை வீசியது எஸ். ரி. எவ். ஊர்ச்சனங்களை எல்லாம் திரட்டி வந்து ஆற்றில் இறக்கி விட்டு ''ஈசன் ஆத்துக்குள்ள இறங்கி பிடிங்கே'' என்று கூறி, ஒருபடலம் ஆரம்பமானது. ஆண் பெண் சகலரும் இறங்கி ஆற்றைகிளறித்தள்ளினார்கள்.

ஈசன் மூக்குத் துவாரத்தை மட்டும் வெளியில் வைத்துக்கொண்டு கடைசி இத்திமரத்துக்கு முன்னால் உள்ள பற்றை யோரமாக, சல்வீனியாவிற்குள் புகுந்து படுத்திருந்தான். எவரும் அந்தப் பக்கமாக வரவில்லை. சிறிது நேரத்தில் பள்ளிமாணவர்களையும் கொண்டு வந்துஇறக்கிவிட்டது எஸ்.ரி.எவ். அதில் இருமணவிகள்தான் எழுமாறாக அந்த இத்தி மரத்தடிக்குச் சென்று பற்றைப் பக்கம் பார்த்துவிட்டார்கள். அங்கே..?! திடுக்குற்றவர்கள், பின் சகஜ நிலைக்கு வந்தார்கள்; ஈசன் அசையாமல் கிடந்தான். ஆளையாள் இனங்கண்டுவிட்ட நிலைமை. சுற்றுமுற்றும் பார்த்த அந்த மாணவிகள், எதையோ தாங்களுக்குள் கதைத்துக்கொண்டனர். ஒருமாணவி ஆற்றுக்குள் மெதுவாக இறங்கி வந்து, பொருளொன்றை எடுப்பதற்கு குனிவது போல் குனிந்து, இன்னும் சல்வீனியாவை அள்ளியள்ளி ஈசனின் உடை தெரிந்த இடத்திற்கு போட்டு மறைத்து விட்டாள். அவ்விடத்தில் நின்று தாமதிக்காமல் விறுக்கென்று இருவரும் திரும்பிவிட்டனர்.

இந்த பகுதியில் துவையல் நடந்து கொண்டிருந்தது வந்த மாணவிகள், ''அந்தப்பக்கமாகப் போகாதீர்கள் அங்கு நாங்கள் ஒரு முதலையைக் கண்டோம்''. என்று ஒரு பீதியை கிளப்பி விட்டு, எல்லோரும் சேர்ந்து எஸ்.ரி.எவ். முன்னால் ஆற்றைக்குடைந்தார்கள்.

அன்று காலை ''ஈசனை முதலை பிடித்துவிட்டது'' எனும் கதைஊரில் பிறந்தது. இன்றிரவு நடந்தகதை, தலையைக் கொண்டு மோதவைத்தது சிப்பாய்கட்கு. இன்று அதிகாலை நடந்த சுற்றிவளைப்பில் எவரையும் முகாம் கொண்டு செல்லவில்லை. ஊரே முகாம் தானே.

□ □ □

ஊர் அடங்கிவிட்டது. மூன்றாவது அணியும் ஊருக்குள்நின்று முகாம் திரும்பியநேரம். ஐயருக்கு ''சீவன் அங்கு கூடு இங்கு'' என்றிருந்தது. இந்த இடைவெளியில் மீண்டும் ஒருதரம் கோயிலுக்குப்போய் வந்துவிட்டார். அடுத்த அணி உள்படு முன் ஈசனை ஊரில் இருந்து அப்புறப் படுத்துவதற்கு இது நல்ல தருணம்.

ஐயர் கட்டிலில் சாந்தபடி காத்துக் காத்திருந்தார். நேரம் செல்லச் செல்ல சித்திரவதை செய்வது போல் இருந்தது.

சிறிது நேரத்தில் பூபாலபிள்ளை வாத்தியாரும் சில போராளிகளும் அவசரக்குறியோடு வந்திறங்கினார்கள். தாமதித்தால் தவிக்கநேரிடும் உடனேயே கோயிலுக்குள் சென்று ஈசனை தூக்கிஎடுத்துக் கொண்டு தயாராகினார்கள். இருளடைந்து கிடந்த முன்னொழுங்கை யூடாக மெயின் வீதியைக்கடந்து நேராகப் பிடித்தால் சரி.

வீதி யோரம் நின்ற மரங்கள் மேலும் இருளால் மறைத்துவிட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பழக்கமில்லாத ஊர் நாய்கள் கூட ''கப் சிப்'' என்று வழி விட்டன. ஊர்த் தொங்கல் வரை பூபாலப்பிள்ளை வாத்தியாரும் ஐயரும் போராளிகளுடன் வந்தார்கள். அதில் நின்று அவர்களை வழியனுப்பி விட்டு இருவரும் நிம்மதி மூச்சுவிட்டனர். பின்னர் அந்த இடத்தில் இருந்து வந்தது போல் திரும்புகின்றனர். எதிரே வந்த ஒருசந்தி அவர்களைப் பிரிக்கின்றது. ஐயர் தனி வழியே கோயிலை நோக்கி நடந்தார்.

ஐயர் மனதிற்குள் கோயில் மணி 'டாங்டாங்' என ஒலித்தது. அவர்மனம் கடவுளுக்கு நன்றி கூறியது. அவர் இதுவரைகாலமும் கடவுளுக்கு செய்த தொண்டிற்கு கிடைத்தபலன், இதுவெனக்கண்டார்.

''இங்குள்ள அப்பாவி ஆலயங்களெல்லாம் இதுவரைக்கும் ஐந்தாறு தடவைகள் உடைந்துடைந்து உயிர் பெற்றவை. இன்னும் சில இருந்த இடமுமில்லை'' தனதூர்க் கோயில் இன்று செய்த பணி மிகச் சரியானது என அவர் மனச்சாட்சி அடித்துக்கூறிற்று.

''நாளை கோயிலுக்கு பிராயச்சித்த கிரியை செய்து பொங்கல் படைக்க வேண்டும். வருகிற அதிரடிப்படைக்கு பிரசாதமும் வழங்கி, ''நாம் உங்கள் பக்கம்'' என்பதையும் மீண்டும் தெரிவித்துவிட வேண்டுமென எண்ணிக் கொண்டு நிமிர்ந்தார். கோயில் வரவேற்றது.




## உணர்ந்துகொள்

**பொன்னிலா**


ஐம்புலன்களையும் அணைத்திடும்
குளிர்
அண்டமும் அதிர்ந்திட
அருகினில் 'ஷெல்' வெடிக்கும்
சருகு விழும் ஓசைதனை
சத்தமின்றிக் காது கொள்ளும்
அடர்ந்த இருள்தனை
ஊடறுத்துக் கண்கள் நோக்கும்
கரத்தினுள் இறுகுண்ட சுடுகலனது
கண்ணியமாய் புன்னகைத்து
கடமைசெய்ய காத்திருக்கும்
இரும்பான போதினிலும்
அதற்கும் உணர்வுண்டு
இன மொழி பாராது
தன் கடமை சிரமமின்றிப் புரியும்
ஐந்தறிவுடன் பகுத்தறிவும்
பெற்றிட்ட மானிடனே!
உனக்கு மட்டும்
உணர்வுவரல் எப்போது?
சிறுமையைக் களைந்துவிடு
களத்தினில் காவல் செய்யும்
கன்னியரை நினைத்துவிடு
வரலாற்று ஏடுகளில் நிலைக்கிட
வழிகாட்டியாய் நீ வாழ்ந்துவிடு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நினைவிலே பதிதல்




*"காற்றையும் எதிர்த்து கண்ணாடியுள் நின்று
ஏற்றிய தீச்சுடர் மேலெழும் - நேற்றைய
நம் வாழ்வைப்பொய்யென்றே சொல்லுமாம்
ஜாம் போத்தல் விளக்கு!"*

# இருட்டைக் கிழித்து எரியும் திரிகள்

□□

**இளையவன்**

ஒரு தேக்கரண்டி மண்நெயுடன் ஒரு இரவு முழுவதும் விளக்கு எரிக்க முடிமா? ஆம். முடியும். இது விஞ்ஞானத்தின் விந்தையா? புதிய தொழில் நுட்பத்தின் அறிமுகமா? நவீன உலகின் புதியகண்டுபிடிப்பா? எதுவோ தெரியாது. ஆனால் எமது மண்ணில் இன்றும் வாழும் ஒவ்வொருவருக்கும் ஜாம் போத்தல் விளக்குகளின் இந்தச் சாதனை அதிசயமாக இருக்காது. தேவைகள் கண்டு பிடிப்புகளின் தாயாக இருக்குமாயின் போர்க்காலம் என்ற நெருக்கடியான சூழல் பிரசவித்த அற்புதக் குழந்தைகளில் ஜாம் போத்தல் விளக்கும் ஒன்று.

கை விளக்குகள் இங்கே ஒன்றும் புதியவையல்ல. குத்துவிளக்குகள் நன்கு அறிமுகமானவைதான். நீண்டு உயர்ந்த பித்தளைக் கைவிளக்குகள் லக்ஷ்பானாவின் மின் ஒளியைக் கண்டதும் தூர ஒதுங்கிக் கொண்டு விட்டன. இன்னும் எத்தனையோ விதம் விதமான விளக்குகள் ஆடம்பரத்தின் வரவிற்கு வழிவிட்டு ஒதுங்கி அரும்பொருட்கள் வரிசையில் சேர்ந்து பழம் பெருமையின் சான்றுகளாகப் போய்விட்டன. இந்தச் சூழ்நிலையில்தான் ஜாம் போத்தல் விளக்கு ஆகிய நான் பிறப்பெடுக்க வேண்டியதாயிற்று.

கானகத்தில் பற்றிக் கொண்டுள்ள பெருநெருப்பை ஊதி அணைக்க முற்படுவோரைக் கேலி செய்யாமல் வேறென்ன செய்ய முடியும். எனது சுடர்கள் மேலெழும் போது இதுதான் செய்தியாக இருக்கிறது. அகன்ற வாயை உடைய ஒரு போத்தல், பழைய சைக்கிள் ரியூப்பில் இருக்கும் வால் கட்டை, கொஞ்சப் பஞ்சு, ஒரு துண்டு கடதாசி, கம்பித்துண்டு ஒன்று இவ்வளவும் தான் எனது அங்கங்கள். இவை அனைத்தையும் தக்கபடி இணைத்துப் பொருத்தி விட்டால் ஜாம் போத்தல் விளக்கு ஆகிய நான் உங்கள் முன் தோற்றம் கொடுப்பேன். தக்கபடி இணைத்துப் பொருத்துவது எவ்வாறு? என்பதையும், இதைப் பயன்படுத்தி ஒரு தேக்கரண்டி மண்நெயுடன் ஒரு இரவுக்கு விளக்கு எரிப்பது எப்படி? என்பதையும் கண்டறிய வேண்டுமா? நீங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தத் தேசத்திற்கு வருவதைத் தவிர வேறு வழியில்லை.

தமிழ் மக்கள் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் சிக்கனத்தின் சிகரத்தை தொட்டவர்கள் தான். சமையலின் போது உலைக்குள் போடும் அரிசியிலிருந்து பிடி அரிசி சேகரிப்பதிலும், சீட்டுக் கட்டுவதற்காக சிறுகச் சிறுகச் சேமிப்பதும் இங்குள்ள மக்களுக்கு கைவந்த கலைதான். ஆனால் இப்போது நான் பிரபலமாகியிருப்பது சிக்கனத்தின் எடுத்துக்காட்டாக அல்ல. எரிபொருளுக்கும் தடை விதித்து போராட்டப் பெருநெருப்பை அணைத்து விட எடுக்கப்படும் முயற்சிகளுக்கு சவால் விடுவது போலவே எனது பிறப்பு. ஆம். லக்சபானாவின் மின்சாரத்தை சுமந்து வந்த பிரம்மாண்டமான இரும்புக்கோபுரங்கள் அர்த்தம் இழந்து போய் கிடக்கின்றன. அபிவிருத்தியை, அரசியல் உரிமைகளை இந்த மண் அடகுவைத்துவிட மாட்டாது என்பதன் சாட்சிக்கான காட்சிப் பொருளாக லக்சபானாவின் கோபுரங்கள். ''33,000 வோல்ட்டு மின்சாரத்தைச் சுமந்து கொண்டிருக்கிறேன் அருகில் வராதே அபாயம்'' என்று மும்மொழிகளிலும் எழுதப்பட்டு பொறிக்கப்பட்டிருந்த அறிவித்தல் பலகைகள் புழுதியினால் மூடப்பட்டுப் போய்விட்டன. மின்சாரம் இல்லையேல் வாழவே முடியாது என்ற நிலையை நோக்கி உலகம் நகரும் இன்றைய காலத்தில் இந்தக் கோபுரத்தில் தொங்கிய அலுமினியக் கம்பிகள் நிலத்தில் படர்ந்து கிடக்கும் காட்சி இந்த மண் எதை விரும்புகின்றது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. லக்சபானாவின் மின் ஒளியில் இந்த மண் மதி மயங்கிப் போகாது என்பதைச் சுட்டிக்காட்டவே தினமும் எரிந்து கொண்டிருக்கிறேன்

குச்சு வீடுகள், குடிசை வீடுகளில் மட்டுமன்றி மாளிகைகள் போன்று ஒரு காலத்தில் அமைக்கப்பட்டிருந்த ஆடம்பர பங்களாக்களிலும் இப்போது நான் குடி புகுந்து விட்டேன். ''இந்தப் பெரிய ஹோல் முழுவதுக்கும் இந்த ஒரு விளக்குப் போதும்'' என்று கூறி ஏற்றிவைக்கப்படும்போது பெருமையாய் நான் பூரித்துப் போகிறேன். அது மட்டுமன்றி அர்த்தம் இழந்துபோன ஆடம்பரமாக தொங்கிக் கொண்டிருக்கும் மின்குமிழ்கள் சீந்துவாருமின்றி தூசிபடிந்து போய் கிடப்பதைப் பார்க்கும் போது எனக்கு உள்ளுக்குள் ஊறும் உற்சாகத்தை எப்படி வர்ணிப்பது?

உயர்தரப் பரீட்சைக்கு படிக்கும் மாணவர்கள் எனக்கு முன்பாக தவம் இருப்பதைக் காணும் போது உண்மையிலேயே எனது நெஞ்சம் நெகிழ்கின்றது. வசதி படைத்த பிரதேசங்களில் வாழ்ந்து வசதி, வாய்ப்புகள் நிறையப்பெறும் மாணவர்களும், கஷ்டப் பிரதேசங்களில் வசதி வாய்ப்புகள் மிகவும் குறைவாக கிடைக்கும் மாணவர்களும் ஒரே பரீட்சையில் தோற்றும் போது ஒரே மாதிரியான அளவு கோல்களால் அளக்கப்படக்கூடாது என்று சாயம் பூசி கொண்டு வந்த ''தரப்படுத்தல்'' பற்றித்தான் எனக்கு நினைவு வருகிறது. கல்வியில் மட்டுமன்றி யுத்தச் சூழ்நிலையாலும் பாதிக்கப்பட்டு கல்வியிலேயே கவனம் செலுத்த முடியாத நிலைக்குள் சிக்குண்டிருக்கும் இப் பிரதேச மாணவர்களுக்கு விசேட வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும் என்று இப் பிரதேச புத்திசீவிகள் ஏன் இன்னும் குரல் எழுப்பவில்லை என்றும் நான் எண்ணிப் பார்ப்பதுண்டு. நான் உமிழும் ஒளியின் தயவில், விழிகளை அகலத் திறந்து புத்தகத்தின் பக்கங்களில் கவனம் பதித்து இரவுகளின் நீண்ட நேரங்களை செலவிடும் மாணவர்களுக்கு உதவமுடிவது குறித்து எனக்குள் ஒரு ஆத்ம திருப்தி.

வீதிகளுக்கு எல்லாம் ஒளி கொடுத்த மின்கம்பங்கள் இப்போது போக்குவரத்திற்கே இடைஞ்சலாகிப் போய் இருக்கின்ற நிலையில் இரவு நேரங்களில் போக்குவரத்துகளில் ஈடுபடுவோர் விபத்திற்குள்ளாவதை தடுக்கும் வகையில் ஆங்காங்கே மின்கம்பங்களிலும் கூட நான் ஒளிர்ந்துகொண்டி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ருக்கிறேன். ஒழுங்காக வாரிவிடப்படாத தலைமயிர்கள் காற்றுக்கு அலைவதைப் போல அந்த மின்கம்பங்களிலிருந்து தொங்கும் கம்பிகளைப் பார்க்கவே பரிதாபமாகக் கிடக்கின்றது. உயிரைக் குடித்து விடும் அபாயத்தை உள்ளடக்கியிருந்த இக் கம்பிகள் இப்போது சிறுசுகள் இழந்த இழப்பிற்கு எல்லாம் வளைந்து கொடுக்கும் காட்சி சர்வசாதாரணமாக இருக்கிறது.

இருட்டைப் பழிப்பதை விடவும் ஒரு மெழுகுவர்த்தியை தானும் ஏற்றுவது மேலானது என்பார்கள். நானும் அது போலத்தான். இந்த மண்ணின் மீது பரந்துள்ள சிறீலங்கா ஆட்சி அதிகார இருட்டை முழுமையாக அகற்ற எனக்கு முடியாது போனாலும் ஒரு சிறு அளவில் ஒளிர்ந்து கொண்டிருக்கிறேன். நான் சிந்தும் ஒளியில் நம்பிக்கையோடும் உறுதியோடும் காத்திருக்கும் மக்கள் நிச்சயம் இந்த மண்ணை விடுவிப்பார்கள். ☐☐



# விளக்குப் புகையில்

☐☐

நாக. சிவசிதம்பரம்

எனக்குப் படிக்க
விளக்கில்லை;
விளக்கம் இல்லை
வெளியிறங்கி,
மூச்செடுக்க முற்றத்தில்
வெளிச்சம் இல்லை.

உழைச்சலுடன்...
சுற்றிவர நோக்கச்
சுடுகிறது உள்மனசு...

என்மூச்சுக் காற்றில்லை
எனது கால் ஈரமில்லை...
என் கோயில் வீதியிலே
இலைதெரியா மரநிழலில்
பள்ளியிலே... என்றந்தப்
பழைய நினைவிடங்கள்...

சுற்றிவர நோக்கச்
சுடுகிறது உள்மனசு
"வந்தவனின்' பக்கம்
வானும் 'வெளிச்சுப்' போய் ..
மேகங்களும்... மௌன
'முட்டில்' திணறுதலாய்...

வயல் வரம்பில் தலைபுதைத்து
வதிவிடங்கள் இழந்த – சிறு
குழந்தைகளின் வெற்றுடம்பாய்
சிறுகுடலின் பெருநெருப்பாய்...

விளக்குப் புகையில்
விரித்தபடி புத்தகங்கள்
சுற்றிவர... நோக்க...!

☐☐

www.tamilarangam.net



வீட்டு வாசலில் இருந்து பார்க்க எல்லாமே தெரிந்தது. சண்முகத்தாற்றை சிவலை மண்டப வாசலில் ''ஸ்பீக்கர்'' கட்டிக் கொண்டிருந்தான். பொங்கல் பானைகள், சருவங்கள், பாளைகள், சிராய் விறகுகள், வாழைஇலைகள், இளநீர்க்குலைகள் எல்லாமே வீதிகளில் அங்கங்கு வைக்கப்பட்டிருந்தன.

சின்னஞ்சிறுசுகள் பூக்களாய் ஓடிவிளையாடிக் கொண்டிருந்தன.



அவள் கண்களில் கண்ணீர் திரண்டது.

இரண்டு கைகளாலும் தலையில் அடித்துக் கொண்டு பெரிதாக அழுதாள்.

நெஞ்சுக்குள் சுரீரென்றது. எவராலும்... எதனாயிம் ஆற்றமுடியாத வலி...

'ஐயோ... என்ரராசா... என்ரதேவு... என்னாலை தாங்க முடியேல்லையடா..'

அவள் மாறிமாறித் தன்நெஞ்சிலும் தலையிலும் அடித்துக் கொண்டாள். அவளை 'அழாதே' என்று சொல்லக்கூட ஒரு சீவன் வீட்டிலில்லை. பார்வதியின் மூத்தவள் புருஷனோடு முத்தையன் கட்டில். அடுத்தவன் ஜேர்மனியில்

# அவளின் பிள்ளைகள்

ஆதிலட்சுமி சிவகுமார்

அம்மன் கோயில் விசாகப் பொங்கல்!

ஊரில் ஒருவீடும் மிச்சமின்றி எல்லாருமே கோயிலில்!

யாரோ ஒரு பெடியன் மணலில் 'பிறதட்டை' உருண்டுகொண்டிருந்தான்.

வாசலில் குந்தி இருந்து பார்வதி எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'அம்மாளாச்சி! உனக்குக்கூட கருணை இல்லாமல் போட்டுதே'

படலைக்குள் யாரோ கூப்பிடுவது போலிருந்தது.

நிமிர்ந்துபார்த்தாள்.

'திருவலையை ஒருக்காத் தருவியளே! தேங்காய் திருவிப் போட்டுத் தாறம்—'

எழும்பிப்போய் திருவலையை எடுத்துவந்து கொடுத்தாள்.

அந்தப்பெண் பார்வதியை அனுதாபத்தோடு பார்த்துச் சென்றாள்!

'மோதகம் அவிக்கப் போயினம் போலை...'

அகதியாக. மூன்றாமவன் தேவு...

'என்ர ஐயா ...இன்பத்திலையும் துன்பத்திலையும் பங்கெடுப்பன் எண்டு சொல்லிப்போட்டு என்னைத் தனியாவிட்டுட்டு போட்டியளே...' எட்டு வருஷங்களுக்குமுன் இறந்துபோன புருஷனிடம் முறையிட்டுக் கதறினாள். வேலிக்குள் நாலைந்து தலைகள் முளைத்தன!

'பார்வதியக்கா... என்ன உது...?'

'என்னாலை தாங்கமுடியேலை...என்ரபிள்ளை உயி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரோடை இருந்திருந்தா பொங்கலுக்கு வந்திருப் பன்...'

'அக்கா பிள்ளை செத்தது துன்பம்தான் .. ஆனா அழாதையுங்கோ... அங்காலை சனம் பொங்குது... அழுறது சரியில்லை...'

பார்வதி பெருமூச்சோடு தன் அழுகையை அடக்கிக் கொண்டாள். நினைவுகள் உள்ளே கொப்பளித்தன! போனமுறை கூட விசாகப் பொங்கல் பெரிதாக நடந்தது. பார்வதியும் பொங்கி, மோதகமும் அவித்தாள்! விளக்கு வைக்கிற நேரமளவில் தேவுவந்தான். அவனுடன் கூட இரண்டுபேர்!

'தம்பிமார்... கொஞ்ச நேரம் இருந்துகொள்ளுங்கோ ... ... பூசையாகப் போகுது... புக்கை திண்டிட்டுப்போகலாம்...'

சருவச்சட்டிக்குள் பூசைச் சாமான்களை வைத்துக்கொண்டு கோயிலடிக்கு ஓடினாள். பூசையில் மனம் லயிக்கவில்லை. வீட்டில் காத்திருக்கும் பிள்ளைகளுக்காக மனம் துடித்தது. பதைபதைத்தது.

'சொல்லாமல் போய் விடுவார்களோ...'

'கெதியாய்...கெதியாய்' என்று மனம் அவசரங் கொண்டது.

ஒன்றுக்கு மூன்று தேவாரம் படித்த சிவலிங்கம் மீது எரிச்சல் பிறந்தது. பூசை முடிந்தவுடன், எல்லாவற்றையும் தூக்கிக்கொண்டு ஓடி வந்தாள்! தேவு றேடியோவைச் சுழற்றி ஏதோ செய்து கொண்டிருந்தான். ஒருவன் கட்டிலில் மல்லாந்து படுத்திருந்தான். மற்றவன்- துவக்கை மடியில் வைத்துக் கொண்டு படலையையே பார்த்துக் கொண்டிருந்தான்!

'தேவுக்கு மோதகங்கள் எண்டால் நல்ல பிடிப்பு...' நினைத்துக் கொண்டு மோதகங்களை பொறுக்கி ஒரு தட்டில் வைத்தாள்! புக்கையை அள்ளி தட்டுகளில் பரப்பி ஆற விட்டாள்! படைத்த மாம்பழங்கள் இரண்டையும் அவசரமாய் தோல் சீவினாள்! கைகால்கள் பரபரத்தன! மூவருக்கும் பார்வதி புக்கையும் மோதகமும் போட்டுக் கொடுத்தாள்!

'தம்பியவை வெக்கப் படப்பிடாது... இது உங்கடை வீடு... முழுத்திலும் திண்டுபோட்டு வெறும் தட்டு விடவேணும்...!

ஒல்லியாய் நீக்குரோ மாதிரித் தலைமயிருடன் இருந்தவன் முகத்தில் சிறிய புன்னகை மலர்ந்தது. தொட்டால் ஒட்டி விடுமோ என்று அச்சமூட்டும் கறுப்பு நிறம்! உள்ளே போய் இன்னும் கொஞ்சம் எடுத்துக் கொண்டு வந்தாள்.

'ஐயோ... அம்மா... எனக்குக் காணுமணை... வயிறு வெடிக்கப்போகுது...' அவன் துள்ளி எழுந்து தலைக்குமேலே தட்டை உயர்த்தினான்! நல்ல உயரம்!

''...ஒவ்வொரு வரியமும் விசாகப் பொங்கலுக்கு இஞ்சை வரவேணும்...''

'அடுத்த வரிசப் பொங்கலுக்கு எங்களிலை ஆர் இருக்கிறமோ?... ஆர் இல்லையோ?...'' தேவு சொல்லி வாய் மூடுவதற்குள் பார்வதி அவனின் மண்டையில் டொக்கென்று குட்டினாள்..

'ஒரு நாளும் உப்பிடி சகுணம் பிழைச்ச கதை கதையாதை...'

'அம்மாளாச்சி ஒருதருக்கும் ஒண்டும் வரவிடமாட்டா...' கூறியபடியே பிரசாதத்தை மூவருக்கும் பூசி விட்டாள். செம்புத் தண்ணீரை வயிறு முட்டக் குடித்து விட்டு எழும்பினார்கள். ஒல்லியானவன் எழும்பி தன் நெஞ்சில் கொளுவியிருந்த கோல்சரைத் தளர்த்திக் கொண்டான். துவக்கையும் தோளில் கொளுவினான்.

'உனக்கு என்னபேரப்பு?'

'முகுந்தன்...'

'அப்ப சரி... போட்டு வாங்கோ... நேரங்கிடைக் கேக்கை வாங்கோ தம்பியவை...'

'அம்மா... வேறை மோதகங்கிடக்கேயணை...'' தேவு இரகசியமாய்க் கேட்டான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'ஓம் கிடக்கு ஏன்?'

'அங்கை பேஸில ஆறெழு பெடியள் இருக்குறாங்கள். கொண்டு போவம்...'

பார்வதி உள்ளே ஓடினாள் பெட்டியில் சருவச்சட்டியில்- கிடந்த எல்லா மோதகங்களையும் பையில் போட்டாள். ரண்டு சீப்பு வாழைப்பழங்களும் போட்டாள். தேவு பையை வாங்கிக் கொண்டு சயிக்கிளில் ஏறினான்.

'அம்மா போட்டு வாறம்...'

ஓம் குஞ்சுகள்...போட்டு வாருங்கோ 'படலை வரை போய் வழியனுப்பினாள். ஒழுங்கையில் அவர்கள் மறையும் வரை நின்று விட்டு வந்தாள்! முன்னால் நிழலாடுவது போலிருந்தது! பார்த்தாள்... பெரியதம்பி வாத்தியார்.

'வாத்தியார்... நீங்களே' உன்னி எழும்பினாள்...

'கொஞ்சம் வெள்ளைப் பூ வேணும்...' வாத்தியார் பூ மரங்களைப் பார்த்தபடி சொன்னார்!

'தாராளமாப் பிடுங்குங்கோவாத்தியார்..'

பெரியதம்பி வாத்தியார் கிணத்தடிக்கு பூப்பிடுங்கப் போனார்!... பெரியதம்பி வாத்தியாரிடம் தான்தேவு படித்தவன்... முரட்டுத்தனம் கொண்ட தேவுவை நெறிப்படுத்தியவர்! வயதுக்கு மீறின துடிதுடிப்புக் கொண்டவனை அவனுடைய திறமைகள் வெளிப்படும்படி ஆக்கியவர். அவருடைய மகளும் ஒருத்தி களத்தில்!

பூக்களைப் பறித்துக் கொண்டு வாத்தியார் வந்தார்...

'பார்வதி ஆறுதலா இருக்கிறாய்...அம்மாளச்சிக்குப் பொங்கேல்லையோ?'

'நான் எல்லாமா நம்பியிருந்த என்ர பிள்ளை செத்துப் போச்சுதாம் எனக்கு என்ன பொங்கலும் விழாவும்?' சலிப்புடன் வார்த்தைகள் விழுந்தன.

'உப்பிடிச் சொல்லாதை பார்வதி தேவுவைப் போன்ற பிள்ளையளின்ரை ஆத்மாக்கள் சாகிறேல்லை இன்னொரு போராளியா பிறந்து கொண்டிருக்கும் அதாலை தான் இண்டைக்கு இத்தினை பெடியள் செத்தும் போராடுற பெடியளின்ர எண்ணிக்கை குறையேல்லை' வாத்தியார் சொல்லுவது உண்மைப் போலத்தான் பட்டது அவளுக்கு. திரும்பிச் சுவரில் இருந்த தேவுவின் படத்தைப் பார்த்தாள். அவன் சிரிப்பது போலிருந்தது! 'நான் சாகேல்லை' என்பது போலிருந்தது அந்தச் சிரிப்பு!

'புத்திரசோகம் பொல்லாதது தான் பார்வதி ..ம்.. ஆனா... மனதை ஆத்திக் கொள்ள வேணும் எல்லாப் பிள்ளையளும் எங்கடை பிள்ளைகள் தான் எண்டு நினைச்சு வாழவேணும்' வாத்தியார் பூக்களுடன் புறப்பட்டார்.

'எல்லாப்பிள்ளையளும் எங்கடை பிள்ளையள் எண்டு நினைச்சு வாழவேணும்' காதுக்குள் திரும்பத்திரும்பக் கேட்டது!

'போட்டு வாறம் அம்மா' போன வருஷப் பொங்கலுக்கு தேவுவுடன் வந்த போராளிகள் கூறியது அவளது காதுகளுக்குள் இனித்தது.

'எல்லாப் போராளிப் பிள்ளையளும் என்ரை பிள்ளையள் தான்...'

கண்களைத் துடைத்து விட்டு எழும்பினாள். கெதியில் அம்மாளாச்சியின் வீதியில் பொங்கி விட்டு புக்கையை பிள்ளைகளுக்கு கொண்டு போய்க் கொடுக்க வேண்டும் என்று மனம் உந்தியது.


கிணத்தடிக்கு ஓடிப் போய்... குளிர்ந்த நீரை அள்ளித் தலையில் ஊற்றினாள். கோயிலை நோக்கி தூக்குக்காவடி ஒன்று சென்று கொண்டிருந்தது! "ஸ்பீக்கரில்; பொங்குவோருக்கு அறிவுறுத்தல்கள்- விடப்பட்டுக் கொண்டிருந்தன. குளித்து முடித்துவிட்டு வழமையாக அம்மாளாச்சிக்குப் பொங்குகின்ற பெரிய சருவப்பானையை வெளியே கொண்டு வந்து துலக்கினாள் மனதுக்குள் ஒரு அவசரம், துடிதுடிப்பு அவளையறியாமலே ஏற்பட்டது! ☐☐

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஐந்தறிவு ஆனதன் அவலம்




செ. பொ. சிவனேசு

தன்னியல்பை விற்றுத்தான் தாத்தா
நீளக்காற் சட்டையும், தடித்த மேற்சட்டையும்
வாங்கிக் கொண்டது-

காலையொன்றில் பல்விளக்குகையில்
பொதிகைத் தென்றல் நடனமிட்ட தாத்தாவின் நாக்கு
தாத்தாவின் கைகளாலேயே வழிப்புக்குள்ளாயிற்று;
வெள்ளை மொழியை நக்கத் தொடங்கிற்று

அதே குருதி எனது நாடி தாளங்களிலும்-
தவிலின் கழுத்துத் தாலியை அறுத்து
'றபாண்' டின் கழுத்தில் கட்ட விழைகிறேன்.
சொந்தப் பனங்கிழங்குகளை விடவும்
அவர்களின் ஈரப்பலாக்காய் சுவை மிகுந்தது.
எலும்புத்துண்டும், கந்தல் துணிகளும்
காட்டிக்கொடுப்பதற்குப் போதுமானவை.

''எப்போது மீண்டும் நீ தமிழனாவாய்?''
என்று கேட்கலாம்
வேட்டைப்பல்லும் ஆட்டிக்காட்ட வாலும்
முளைத்த நிலையில் எவ்விதம் தமிழனாக?
முதலில் மனிதனாக வேண்டாமோ?

''மீளவும் சிந்தி'' எனவுங் கூறலாம்
எவ்விதம் சிந்திக்க?
இப்போது எனக்கு இருக்கிற அறிவு
ஐந்து மட்டுமே!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






தமிழகம் - புரிசையில் நடந்த தெருக்கூத்து

# வாழ்வோடு கலந்த கலை

நடு இரவு மணி ஒன்றோ இரண்டோ. அந்த கிராமத்து ஜனங்களுக்கு கவலையில்லை. யார் கண்களிலும் உறக்கத்தின் சாயல் கூட இல்லை— முதியவரிலிருந்து சிறுவர் வரை. விடிய விடிய கூத்துப் பார்க்க என்றே அண்டை கிராமங்களிலிருந்தும் வந்திருக்கிறார்கள். மகாபாரதக் கூத்து. நேற்று கர்ண மோட்சம். இன்று பதினெட்டாம் போர். நாளை படுகளம். அவர்களுக்கு எல்லாம் பரிச்சயம். துரியோதனனும் கர்ணனும் கண்ணனும் புராண பாத்திரங்கள் இல்லை. மிக நெருக்கமான பக்கத்து வீட்டுக்காரர்கள்.

அப்படிப்பட்ட நெருக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர் துரைசாமி கண்ணப்ப தம்பிரான் (77). அவரது தெருக்கூத்துனாலேயே புகழ் பெற்ற— சென்னையிலிருந்து 120 கி.மீ. தொலைவில் உள்ள — புரிசையில் பத்து வருஷ இடைவெளிக்குப் பிறகு பத்து நாட்களுக்கு மகாபாரதக் கூத்து நடப்பதே பெரிய விசேஷம். மேடையில் அமர்ந்து கடந்த 29 நாட்களாகத் தொடர்ந்து பல இடங்களில் விடிய விடிய கூத்து நடத்தியும் கொஞ்சங் கூட சோர்வில்லாமல் தன்னுடைய சிஷ்யர்கள் ஆடிக் காட்டும் கூத்தை மிக ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டே பாடிக் கொண்டிருக்கிறார் தம்பிரான். கண்ணைக் கூசும் வண்ண விளக்குகள் இல்லை. காதைத் துளைக்கும் ஒலி பெருக்கியில்லை. குரல் கணீரென்று ஒலிக்கிறது.

''ஏன் இப்படி மனம் கலங்குறீர் மன்னா...''

தவிலும், மத்தளமும் ஆர்மோனியமும் கூடச் சேர்ந்து கொள்கிறது பாவத்திற்குத் தகுந்தாற் போல். பாட்டு முடிந்ததும் கர்ணன் சொல்ல வேண்டிய அடியையும் எடுத்துக்கொடுக்கிறார்.

கர்ணன்; மன்னர்க்கு மன்னனே. வணங்கா முடி சேகரனே. இதற்கா நீ தடுமாறுகிறாய் என்று...

கட்டியக்காரன்: என்று ..

கர்ணன்: நான் என் குருகுலக் கொழுந்திடம் தேறுதல் சொல்ல வேண்டாமா?

கட்டியக்காரன்: நீ இருந்தாதானே சொல்லப் போறே.

கர்ணன்: இல்லாமே எங்கடா போகப் போறேன்?

கட்டியக்காரன்: அங்கே(கையை மேலே காட்டி) நம்ம தாத்தா பாட்டா எல்லாம் போனாங்களே...

கர்ணன்: அட மடயா. நான் மாத்திரம்தான் போகப் போறேனா, பெரியவங்க போன இடத்துக்கு; அதுக்காக தேறுதல் சொல்லாமல் இருப்பனா...

பார்வையாளர்கள் மெய்மறந்து கூத்தை ரசிப்பது மட்டுமில்லை. முழுசாக அதில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஐக்கியமாகியிருக்கிறார்கள். கர்ணனின் மனைவி, கர்ணனை யுத்தத்திற்குப் போகாதே, 'கெட்ட கனா கண்டேன்' என்று அழுதால் ஆண்கள் கூட நெகிழ்ந்து அழுகிறார்கள். எல்லோரும் படிப்பறிவில் லாத எளிய மக்கள். விவசாயிகள். வயல் வேலையில்லா கோடைக் காலத்தில் தான் ஊரில் துர்க்கையம்மன் திருவிழா நடக்கும். அத்துடன் ஒட்டி நடக்கும் தெருக்கூத்தைப் பார்க்க யாரும் தவறியதில்லை. மகாபாரத மும் ராமாயணமும் அவர்களுக்கு அத்துபடி. அடுத்தடுத்து வரும் சீன்கள் என்ன என்று அவர்களுக்குத் தெரியும். வேஷம் போடுப வர்கள் எதையாவது விட்டுவிட்டால், அதை எடுத்துச் சொல்லத் தெரியும். 'முனுசாமி, அதையேன் மறந்தே, என்று மேடையை நோக்கிக் கேட்க முடியும்.

''மூதாதையர்கள் எப்படி சொன்னார் களோ அதைத்தான் பின்பற்றணும்னு நான் நினைக்கிறேன்'' என்கிறார் கண்ணப்ப தம்பிரான். ''புதுமையா ஏதானும் செய் தம்னா இதுக்கு முந்தி இப்படிப்பட்ட பாத்திரம் இருந்ததாங்கற கேள்விக்கு பதில் சொல்லணும். புதுமைன்னா, அடவுகள் பாவங்கள் இதிலே விருத்தி பண்ணிக்கலாம். அதைப் பத்தி யாரும் குறைசொல்ல மாட் டாங்க.''

கண்ணப்ப தம்பிரான் இத்தனை மரி யாதை வைக்குமளவுக்கு அவர்களுக்கு ஞானத்தை வளர்த்த பெருமை தம்பிரா னின் பாட்டனார் வீராசாமியின் காலத்தில் துவங்கிற்று. தோல் பொம்மை செய்து தன் வீட்டிலேயே பொம்மலாட்டம் நடத்தி மகாபாரதக் கதைகள் பரப்பியவர். இதையே மனிதர்களை வைத்து நடத்தி னால் என்ன என்று சில வித்வான்கள் யோசனை கூற புரிசையில் தெருக்கூத்து பிறந்தது. வீராசாமிக்குத் தெரிந்த பாடல் கள் எல்லாம் தமிழ்ப் பாடல்கள். அவற் றுக்கு நாடக ரூபம் கொடுத்து அவருடைய மகன் குமாரசாமியைத் தொடர்ந்து சந்த திகளுக்கு சொல்லித் தரப்பட்டு, கண்ணப்ப தம்பிரானிடம் வந்தபோது அவரது அற்புத ஆற்றலால் புதிய பரிமாணங்களைப் பெற் றது. ''அவர் எந்த வேஷம் போட்டாலும் அது மாஸ்டர் பீஸாயிடும்'' என்கிறார் கூத்துப்பட்டறை முத்துசாமி. கண்ணப்ப தம்பிரானை வெளி உலகத்துப் பார்வைக்குக் கொண்டு வந்ததே முத்துசாமிதான். ''முதல் முதல் கண்ணப்ப தம்பிரானுடைய நிகழ்ச்சியைப் பார்த்ததும் தமிழருடைய தியேட்டர் இதுதான்னு புரிஞ்சுண்டேன்'' என்கிறார் முத்துசாமி.

அதில் சந்தேகமில்லை. சரளமாய், அழகுத் தமிழில் பாத்திரங்கள் சொல்லும் வார்த்தைகளில் கமழும் மண் வாசனையே பார்ப்பவர்களை ஈர்த்து ஐக்கியப்படுத்து வதன் காரணம்.

''வருத்தமாய் விதுரர்தானும்
வந்து மாமணி முகப்பில்
இருக்கிறான் என்று சொல்லி
காவல்காரனும் இயம்புகின்றான்''

என்று கம்பீரமாக தம்பிரான் குரல் எழுப்ப, விதுரரை அழைத்து வர பீம அர்ஜுன நகுல சகாதேவனுடன் கூட்டமே கிளம்பத் தயாராகிறது. கூத்தில் வேஷம் போட்டிருக்கும் முனுசாமி, வேதாசலம் போன்றவர்கள் 12 வயசிலேயே பயிற்சி பெற்றவர்கள். ''சின்ன வயசிலேயே வரணும். அப்பதான் செய்ய முடியும்'' என்கிறார் தம்பிரான். அது வெறும் தொழில் இல்லை. உபாஸனை. வழிபாடு.

தெருக்கூத்தின் ரிஷிமூலம் நதிமூலம் பற்றின ஆய்வு தம்பிரானுக்கு முக்கிய மில்லை. தமிழ்நாட்டில் இன்னும் பல இடங்களில் தெருக்கூத்து நடக்கிறது. ஆனால் ஒவ்வொன்றுக்கும் அதனதன் தனித்தன்மை உண்டு. ''அர்ஜுனன் ஹஸ்தி னாபுரத்தில் இருந்தவன்கறாங்க. ஆனா பாடல்லெ காஞ்சி ராமேசுவரத்துக்கு வந்த தாகவும் இருக்கு. இதை பாடல் பாடின வருடைய பண்பு என்கிறதா, வேறு என்ன

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சொல்றதுன்னு தெரியல்லே'' என்கிறார் தம்பிரான்.

இந்தப் பண்பு நமது ஆதார வேர்களில் இருப்பதன் பரிமாணத்தை புரிசைத் தெருக்களில் நடந்த கூத்து வெளிப்படுத்திற்று. நடிகர்கள் வேறு ஆடியன்ஸ் வேறு என்று பிரிக்க முடியாத கலவையாக இரவு முழுவதும் மேடையிலே கூத்து நடக்கும். பகல் நேரத்தில் அந்த அத்தியாயத்துக்கு எந்த மாதிரி சூழல் வேண்டுமா அதற்கேற்ற வெளியிலே, சடங்கும் கூத்துமாக நடக்கும் நிகழ்ச்சியில் கிராம மக்கள் முழுவதும் கலந்து கொள்கிற அற்புதத்தை வேறு எங்கும் பார்க்க முடியாது. ''சுற்றுச் சூழல் தியேட்டரை பிரபல்யப்படுத்தும் ரிச்சர்ட் ஷெக்னரின் (*Richard Schechner*) கற்பனையை விட நூறு மடக்கு அதிக சக்தி வாய்ந்தது இது'' என்கிறார். கண்ணப்ப தம்பிரானுடைய மருமகனும் 'கருஞ் சுழி' போன்ற விருதுபெற்ற நாடகங்களை இயக்கியவருமான ஆறுமுகம். ''கூத்துதான் என்னுடைய இன்ஸ்பிரேஷன்'' என்கிறார் ஆறுமுகம். அர்ஜுனன் தபஸுக்கு சில இடங்களில் வைக்கும் நூலேணியை கருஞ் சுழியில் உபயோகித்திருக்கிறார். ''கூத்து நவீன நாடகத்துக்கு ஆதாரமாக இருக்கணும்'' என்கிறார்.

ஆனால் கூத்தின் பிரும்மாண்டத்தை, அதன் தத்ரூப பரிமாணங்களைப் பார்க்க புரிசைக்குத்தான் செல்ல வேண்டும். இரவு முழுவதும் பதினெட்டாம் போர் நடந்தது அதாவது இரவு பத்துக்கு ஆரம்பித்து காலை ஏழு மணிவரை. கிராமத்தில் யாரும் கண்ணுறங்கவில்லை. ஆனால், அயர்வின் அறிகுறி கொஞ்சமும் இல்லாமல் திரௌபதி அம்மன் சிலைக்கு முன் மளமளவென்று நூறடிக்கு துரியோதனனின் உருவத்தை மண்ணால் நிலத்தில் செய்து விட்டார்கள், பத்து மணிக்குப் துவங்க இருந்த படுகளத்துக்காக. கண் சொடுக்கும் நேரத்தில் வண்ணம் பூசி, வயிற்றுப் பாகத்தில் சிவப்பு நிற திராவகம் கொண்ட பானையை வைத்து — இந்த ஏற்பாடுகள் ஒருபுறம் நடக்கையில், படுகளத்தில் பங்கு கொள்ள (இரவு முழுவதும் நடித்திருந்த) பீமனுக்கும் துரியோதனனுக்கும் மும்முரமாக மேக்கப் நடக்கிறது. ஒவ்வொரு பாத்திரத்துக்கும் தகுந்த மாதிரி மேக்கப் மாறும். பாவத்துக்கு தகுந்த மாதிரியும் மாறும். முன்பெல்லாம் பச்சிலைச்சாறு. இப்போது ரசாயனக் கலவையை உபயோகிக்கிறார்கள். கண்ணர்பாளையத்திலிருந்து வந்திருந்த துடும்பாட்டக்காரர்கள் பறை கொட்ட, தெருத்தெருவாக துரியோதன் — பீமனின் சண்டை ஆரம்பிக்கிறது.

பதினொரு மணி கொளுத்தும் வெயிலைப் பொருட்படுத்தாமல் 'படுகளத்தை' சுற்றி கூட்டம் நிற்கிறது. துரியோதனனின் மண் உருவத்தைச் சுற்றிச் சுற்றி ஆவேசத்துடன் சண்டை பிடிக்கும் பீமனுக்கும் துரியோதனனுக்கும் உண்மையிலேயே ஆவேசம் ஏற்பட கூட்டத்தினர் பாய்ந்து கட்டுப்படுத்த வேண்டியிருக்கிறது. கடைசியில் தர்மம் ஜெயிக்கிறது. துரியோதனனின் மண் உருவத்தில் தொடைமேல் பீமன் ஒரு போடு போட உள்ளிருக்கும் மண்பானை உடைந்து சிவப்பு ரத்தம் வெளியில் பீறிட... மகாபாரத யுத்தம் முடிகிறது.

11 வருஷம் கழித்து மகாபாரதக் கூத்து நடக்கும் விபரம் அறிந்து புரிசையைச் சேர்ந்த ராமசாமி ஆவடியிலிருந்து வந்திருக்கிறார். பாண்டிச்சேரியிலிருந்து சில மலையாளிகள் — மற்றபடி தமிழக பட்டணங்களிலிருந்து யாருமில்லை. அதைப் பற்றி கண்ணப்ப தம்பிரான் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. சங்கீத நாடக அகாடமி விருதும், பல வெளிநாட்டுப் பயணங்களும் அவர் மீது ஒட்டின சுவடு இல்லை. ''அவர் ஒரு அற்புதம்'' என்கிறார் இந்திரா பார்த்தசாரதி. பாண்டிச்சேரி நாடகக் கல்லூரியில் பணியாற்றிய போது அவரை அழைத்து பட்டறை நடத்தியது மறக்க முடியாத அனுபவம் என்கிறார். 'எத்தனையோ விஷயங்களை நாம

www.tamilarangam.net



இழந்திருக்கோம். இழந்ததெல்லாம் கூத்திலே இருக்கு'' என்று முத்துசாமி சொல்வது வெறும் உணர்ச்சிவசப்பட்ட வார்த்தைகள் இல்லை. எழுதப்பட்ட இலக்கணம் ஏதும் கூத்துக்கு இல்லாவிட்டாலும் ''எக்ஸிட் என்ட்ரி போன்ற தீர்மானங்கள் ரொம்ப கச்சிதமாக இருக்கும்'' என்று முத்துசாமி வியக்கிறார்.

வெளிநாடுகளில் தம்பிரான் ஏதாவது ஒரு அத்தியாயத்தை சுருக்கமாகச் செய்தது துண்டு. காப்ஸ்யூல் வடிவத்தில் அவருக்குத் திருப்தியில்லை. கூத்தை நவீன நாடகத்தில் புகுத்த வேண்டுமா என்ற சர்ச்சையிலும் சுவாரஸ்யமில்லை. அவருக்குக் கூத்து அர்ஜுனனின் தவத்தைப் போல. அதைப் பார்க்க புரிசையின் எளிய மக்கள் இருக்கிறார்கள். அவரோடு சேர்ந்து ரசிப்பார்கள். அவருக்கு ''கடைசியா வர்ற முடிவுதான்'' ஓய்வு. அதுவரை,


''ஏன் இப்படி மனம் கலங்குறீர் மன்னா...''

தவிலும் மத்தளமும் ஆர்மோனியமும் நிசப்தமான இருளைக் கிழிக்கின்றன.

நன்றி: வாஸந்தி - இந்தியாடுடே
ஜூன் 21, ஜூலை 5, 1994

---

☐ புதுநிலம்




# செல்லும் வழி

இ. யதார்த்தன்

கறுப்புச் சாயக் களிக்குள்
பூமிக்கோளம் புதைந்து கொண்டது.
நினைவினில் எல்லாம்
குளமாய்த் தேங்கின
உயிரை இழப்பதை
வியர்வை துடைப்பதுபோல்
இத்தனை உற்சாகமா
சாவென்பது
தலைமயிரொன்றுதிர்வதா?

முத்துச் சிமிழாய்
இத்தனை மகிழ்வு முகத்தில்......

மணவறை...... வெளிநாடு......
மேற்கல்வி...... எல்லாம்
மனவெறுப்பில் தொலைந்தன
மக்களின் உயர் வாழ்வே
நினைவில் பூத்தன

கடிகார முட்கள்
காவிய நேரத்தைக் காட்டியாயிற்று
'சக்கை வண்டி' யில் ஏறிக்கொண்டான்
திக்குத் தெரியா இருளில்
வண்டி கண்ணில் மறைந்தது
கைகள் அசைவது போல்
நினைவினில் தெரிந்தன
கணவேளையின் பின்......
ஒளிப்பிளம்பு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு பார்வை




# கூத்துக்கலையும் பெண்களின் பங்களிப்பும்

பொன்னிலா

தமிழர்களின் பழைய வரலாறுகளை நோக்குமிடத்து அவர்களுக்கென்று ஒரு தனித்துவமான கலை கலாச்சாரம் அன்று தொடக்கம் அவர்களின் உயிருடன் ஒன்றியதாகவே இருந்து வந்துள்ளது. மூவேந்தர்கள் கூட அதனைக் கட்டிக்காக்கப் பெருந்தலைப்பட்டனர். அவ்வாறான அருங்கலைகள் இன்று சிங்கள அடக்குமுறையினரால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி, கலைகள் மிளிர்ந்த இடங்கள் அழிக்கப்பட்டு மக்கள் விரட்டப்பட்டுள்ளனர். எது எவ்வாறு இருப்பினும் அப்பண்பினைக் காப்பது நமது தலையாய கடமை எனக் கொண்டே, முத்தமிழ் விழாவரையில் அவை புதுப்பிக்கப்பட்டு புத்துயிர் ஊட்டப்பட்டு வந்துள்ளது.

அவற்றின் பரிணாம வளர்ச்சிதனையும், அதன் சிறப்பியல்புகளையும் இனிக்காண்போம். எமது பாரம்பரிய கலைச் செல்வங்களில் நாட்டார்பாடல்வகைகள், கோலாட்டம், கும்மி , காவடி போன்ற கிராமியக் கலைகள், நாட்டுக்கூத்துக்கள் என்பன மிகவும் சிறப்புமிக்கவை. அவற்றுள் முதன்மை பெறுபவை கூத்துக்கள் தான். செய்தி ஒன்றினை மக்களுக்குக்கூறும் முகமாக இவை அமைக்கப்பட்டுஆடப்பட்டு வந்தன. இவற்றை வடமோடி, தென்மோடி என இருவகைப் படுத்துவார்கள். இவற்றின் வளர்ச்சியை நோக்குமிடத்து சாதாரண பாமரமக்களின் வாழ்க்கையுடனேயே பின்னிப்பிணைந்து உருப் பெற்றன எனலாம்.

இதில் அவர்களின் வாழ்க்கைப் பண்புகளே வெளிப்பட்டன. விவசாயம் சார்ந்த மக்கள் அறுவடை செய்யும் காலங்களில் உடுக்கு அடித்து (தோலால் ஆனபண்புடைய வாத்தியக் கருவி) ''பள்ளுப்'' பாடுவார்கள். நெய்தல் சார்ந்த மக்களை எடுத்துக் கொள்வோமானால் படகுவலிக்கவும், வலை இழுக்கவும் என மிகவும் இனிமையான இசையுடன் கூடிய ',அம்மானைப்'' பாடல்களைப் பாடினார்கள். இம்மக்களின் உணர்வூற்றே பாடலுடன் நடிப்பும் ஆட்டமும் இணைந்து 15 அல்லது 16ம் நூற்றாண்டளவில் கூத்து வடிவம் பெறத்தொடங்கின எனலாம். கூத்து என்றால் குதித்தல் அல்லது ஒலியோடு ஆடுதல் எனப் பொருள்படும்.

பல்வேறு வகையான செய்திகளையும் மக்கள் முன் வெளிக்கொணரும்முகமாகவே ''வட்டக்களரியில்'' இவை ஆடப்பெற்றன. வட்டக் களரி எனில் நாற்புறமும் சிறிய தடி நட்டு ஓலை அடைத்து நடுவில் மணல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குவித்து அதனுள் ஏறி நின்று வட்டமாகச் சுழன்று ஆடுதலாகும். இதனை மக்கள் நாற்புறமும் நின்று பார்க்கும் வாய்ப்பு இருந்தது. ஆட்டத்தினை வட்டம் போடுதல் எட்டுப் போடுதல் என்றும் கூறுவர். அதாவது இருவட்டமாகவும் ஆடுவார்கள். பெரும்பாலும் சித்திரை முதல் ஆவணிமாதம் வரையில் விவசாயம் சார்ந்த மக்களுக்கு ஓய்வுகாலமாகையால் அவ் இடைவேளைகளிலேயே பெருமளவு கலைகள் வளர்க்கப்பட்டுவந்தன. வைகாசி மாதத்தில் கூடுதலானசமயச் சடங்குகளும் கிரிஜைகளும் நடைபெறும். ஆகையால் அக் காலப்பகுதியிலேயே கோவில்களின் முன்பாக இவை ஆடப்பெற்றன. சிலப்பதிகாரத்தில் கூட ஆச்சியகுதவ, வேட்டுவரி போன்ற கூத்துக்கள் சிறப்புமிக்கவையாக கூறப்படுகிறது.

ஆகவே கூத்தானது எமது ஈழமண்ணிலேதான் பரினாமம்பெற்றது எனக் கொண்டாலும்கூட இந்திய தொடர்புகளும் இதில் பிணைந்துள்ளது என்பதனை மறுக்க முடியாது. வடமோடிப்பாங்கினை எடுத்துக் கொள்வோமானால் இராவணேஸ்வரன், வாலிவதம், கர்ணன்போர் போன்ற வீரம் செறிந்த கதைகளே இடம்பெறும். பாரமான உடைகளையே இவர்கள் அணிவார்கள். ஆட்டத்தின்போது கூட முழுப்பாதமுமேநிலத்தில் பதியும்வண்ணம் தாளத்திற்கேற்றவகையில் ஆடுவார்கள். இவர்களின் ஆட்டம் இலகுவான தன்மையுடையது.

தென்மோடியை எடுத்துக்கொள்வோமானால் இன்பியலை உடைய காதல் கதைகளே இதில் பெருமளவில் காணப்படும். நொண்டிநாடகம், கோவலன் கூத்து என்பவை உதாரணங்களாகும். இதில் நடிகர்கள் இலகுவான பூமுடிகளையும், உடைகளையுமே அணிவார்கள். ஆட்டத்தின்போது மிகவும் நுணுக்கம் அதிகம். ஏனெனில் முன்விரலும் பின்குதியும் நிலத்தில் படும்படி மிக வேகமாகச் சுழன்று ஆடுவார்கள். முன்னைய வட்டக்களரிக் கூத்தின் சிறுபிரிவுதான் தெருக்கூத்து ஆகும். இந்தியாவில் இதுதான் முக்கியமானதாக உள்ளது.

இவற்றைவிடத் திண்ணைக்கூத்து என்னும் பிரிவுமுண்டு. கிறிஸ்தவ சமயத்தினை மையமாகக்கொண்ட கதைகளே இதில் ஆடப்பெற்றன. கரையோரப்பகுதிகளான பாஷையூர், குருநகர், நாவாந்துறை, மற்றும் ஆனைக்கோட்டைப் பகுதிகளிலும் இவைநடைமுறையில் இருந்து வந்துள்ளது. மேலும் வடமோடி தென்மோடிக் கூத்துக்கள் இடத்திற்குஇடம் மாற்றம் அடைந்து காணப்படுகிறது. ஆட்டத்திலும், தாள லயக்கட்டுக்களிலும் இவை வேறுபடும்.

ஈழத்துக்கூத்து வகைகளுள் நொண்டி நாடகம், பள்ளுநாடகம், மகுடிக்கூத்துக்கள், காத்தவராயன் மெட்டில் அமைந்த கூத்துக்கள், கதகளிக் கூத்துக்கள் இவை தவிர மற்றையவை கூத்து ஏகத்தைச் சார்ந்தவையல்ல . அவை இசை நாடகத்தின் தன்மைதனைக் கொண்டவையாகும். மேலும் சாதிய அடிப்படையிலும், பரம்பரை பரம்பரையாகவும் பலர் தமக்கென்று சில கூத்துக்களைத் தக்கவைத்துக் கொண்டுள்ளனர். இன்றுகூட பெரும்பாலான இடங்களில் இதைக்காணலாம். செட்டிய குலத்தோர் கோவலன் கூத்தையும், கரையோர மக்கள் கிறிஸ்தவக்கூத்துகளையும்' விவசாய மக்கள் பள்ளுக்கூத்துகளையும் கொண்டிருந்தனர். கூத்து ஆடுபவர்கள் பெரும்பாலும் தாழ்ந்த குலத்தினராகவே கருதப்பட்டு வந்தனர். கூத்தின்போது தீப்பந்தம் பிடிக்கவும் பறைமேளம் அறையவும் இன்ன இன்ன சாதியார் செய்யவேண்டும் என்ற ஒருநடைமுறை அன்று இருந்து வந்துள்ளது.

கூத்துக்கலைகளில் முதலிடம் பெறுவது மட்டக்களப்பு மாவட்டமாகும். மற்றைய இடங்களைவிட ஆட்டம் இங்கு மிக விறுவிறுப்பானது. பாட்டு மற்றும் தாளக்கட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஓசைகள் என்பன வித்தியாசமானவை. மேலும் வடதென்மோடிகளை விட பள்ளுக் கூத்து என்பனவும் ஆடப்பெறுகின்றன. தென்மோடியில் வசந்தன் கூத்து, வாளபீமன், அனுவுருத்திரன், அலங்காரரூபன், ஆகிய கூத்துவகைகள் பிரபல்யமானவை. இதில் விலாசம் பெரிதும் பேணப்படுவதில்லை. (விலாசம் - இசைநாடகத்தன்மை) மத்தளம், சல்லரி, சதங்கை ஆகியவையே பெரிதும் பயன்படுத்தப்படும். வீணையும், யாழும் பெறும் முக்கியத்துவத்தைவிட உடுக்கு, பறை, குழல், தம்பட்டம், சதங்கை, மகுடி, மத்தளம், சல்லரி என்பனவே முதன்மை பெறும். வர்ண மெட்டுக்களும் துள்ளல் இசையும் கொண்ட கூத்துக்களே இங்கு ஆடப்பெறும்.

வடமோடியைப் பொறுத்தவரையில் ''வரவு'' தனைச் சொல்லிக்கொண்டு வருவது பொருந்தும். மேலும் நின்று ஒரு இடத்திலேயே ஆடுவார்கள். தென்மோடியில் சொல்லிவருவது பொருந்தாது. இதில் சுற்றி ஆடும் முறை உண்டு. மட்டுநகரில் - கன்னங்குடா, பாசிக்குடா, ஏறாவூர், களுவாஞ்சிக்குடி, வீரமுனை, தம்பிலுவில், களுதாவளை, வெருகல், மண்டூர், செட்டிபாளையம், தேற்றாத்தீவு, எருவில், வந்தாறுமுலை, சித்தாண்டி, கதிரவெளி ஆகிய பகுதிகளில் இரு கூத்துக்களுமே ஆடப்பெறுகின்றன. இங்கு கன்னங்குடாப் பகுதியே கலை ஊற்றில் சிறந்த இடமாகும்.

திருகோணமலைப் பிரதேசத்தில் காத்தான் கூத்தும், சில இசை நாடகங்களும் உண்டு. இடங்களைக் குறிப்பிட்டுக்கூற முடியாது. ஏனெனில் கூத்துக்கள் அங்கு பெரும்பாலும் முக்கியத்துவம் பெறவில்லை. மன்னாரைப்பொறுத்தவரையில் யாழ்பாங்கு, வடபாங்கு மற்றும் மாதோட்டப்பாங்கு அல்லது தென்பாங்கு என்பன மரபு வழியாக இங்குள்ளது. பேசாலை, வங்காலை, முருங்கன், மாந்தை, தலைமன்னார், நானாட்டான், கட்டுக்கரை, தள்ளாடி, விடத்தல்தீவு, இலுப்பைக்கடவை, செட்டிக்குளம் போன்ற பகுதிகளிலும் இவை ஆடப்பெறுகின்றன. முல்லை மாவட்டத்தில் கோவலன்கூத்து பிரபல்யமானது. இதைவிட தொண்டிநாடகம், ஆட்டுவணிகர் போன்றனவும் உண்டு முள்ளிவாய்க்கால், புதுக்குடியிருப்பு வட்டுவாகல், வற்றாப்பளை, மாமுலை, அலம்பில், ஒட்டுசுட்டான், தண்ணீரூற்று, ஏழுகன்னியர் கோவில் பகுதி ஆகிய இடங்களிலும் தென்மோடிஆடப்பெற்று வருகின்றது.

யாழ் தீபகற்பத்தினை பொறுத்தவரையில் வட்டுக்கோட்டை, இறாத்தலடி, ஆனைக்கோட்டை, இருபாலை, கோண்டாவில், குருநகர், பாஷையூர், நாவாந்துறை, கொழும்புத்துறை, நெல்லியான், புறாப்பொறுக்கி, நெல்லியடி, மாதனை, அரியாலை, கிளாலி, இயக்கச்சி, பளை, யில் வண்ணாங்கேணி, அரசகேணி, தாளையடி, மற்றும், நீர்வேலி ஆகியபகுதிகளிலும் இருமோடிக் கூத்துக்களும் இருந்த போதிலும் வடமோடி தான் இங்கு ஆடப்பெறுகின்றது. தென்மோடி ஆடப்பெற்ற போதினிலும் இதில் மிகக் குறைவான ஆட்டமே காணப்படும் தன்மை உள்ளது. ஆட்டம் இல்லாத தென்மோடிக்கூத்துக்கள் கரையோரப்பகுதி மக்களினாலேயே வளர்ச்சிபெற்றன.

1505ல் பின்னர்தான் கிறிஸ்தவச் சமயத்தினை பரப்பும் முகமாக இவை ஆடப்பெற்றன. இச்சமயத்தின் தன்மைக்கு ஆட்டம் ஒத்துவராத காரணத்தினால் திருத்தந்தை ஞானப்பிரகாசரினால் ஆட்டம் முற்றுமுழுதாக நிறுத்தப்பட்டது. ஆனாலும் கூத்து நடைபெறும் போது அதில் ஆட்டத்திற்குரிய பண்புகள் முன்னர் இருந்துள்ளது என்பதனைக் காணலாம். வட்டுக்கோட்டை இறாத்தலடியினைப்பொறுத்தவரையில் வடதென்பாங்கு இரண்டுமே அதில் கலந்துள்ளன. இவை தவிர தீவகப் பகுதியில் காரைநகர் முக்கிய இடமாகும். மலையகப் பகுதியிலும் காமன்கூத்து அருச்சுனன் தபசு, பொன்னர்சங்கர் போன்றவையும் வழக்கில் உள்ளன. சமய சமூக அமைப்புக்களே இதன் வளர்ச்சிக்கு முக்கிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காரணமாக அமைந்துள்ளது. இடத்திற்கு இடம் மாறுபடவும் இதுவே மூலகாரணமாக உள்ளது.

மேலும் சினிமாக் கலையின் தாக்கமும் இதில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. மக்கள் அதனை விரும்பி ரசித்ததனால் சினிமாத் தன்மைகள் இதில் புகுந்துகொண்டன. வட்டக்களரி பின்மேடையாக மாறியது. நடிகர்களின் நடிப்பில்கூட சினிமாத் தன்மை கலந்துகொண்டது. இறுதியில் இவை இசை நாடகத் தன்மையினைப் பெறத் தொடங்கின இதனால் முழுமையான கூத்துவடிவம் படிப்படியாக மறைய நவீன நாடகங்கள் தலையெடுக்கத் தொடங்கின.

முன்னைய காலத்தில் புராணக்கதைகளே முக்கிய இடம்பெற்றன. சமூக நாடகமும் இருந்த போதிலும் 1980 ஆம் ஆண்டிற்கு பிறகுதான் புதிய கருப்பொருள் அரசியல் பரிமாணங்களையுடைய நவீன நாடகங்கள் உருவாகின. ஆனால் நவீன கதைகளைக் கூறும்முறை கூத்துக்களில் வளரவில்லை. மக்களும் அதனையே விரும்பிய காரணங்களினால் அவை புதிய முறையுடனேயே நின்று விட்டன.

முன்னைய காலத்தில் ஒரு கதையினையே முழுநீளமாக்கி மூன்று, அல்லது நான்கு இரவுகள் வரை தொடர்ந்து ஆடுவார்கள். பின்னர் ஒரு இரவு நாடகங்கள் இடம்பெற்றன. இரவு 7 மணியளவில் ஆரம்பமாகி விடியும்வரை நடைபெறும். மக்களுக்கு பெரிய அளவில் ஓய்வுகிடைப்பதனாலும் அவர்கள் அதனை விரும்பிப் பார்த்து மகிழ்ந்தனர். இன்றைய காலத்தின் தேவையை உணர்ந்து பத்துமணிநேரக் கூத்துக்கள் இருமணிநேரமாகக் குறைக்கப்பட்டது. ஏனெனில் நவீன யுகத்தில் முன்னர் போன்று ஓய்வு கிடைப்பதில்லை. சினிமாக்கலையின் தாக்கமும் அதனுடன் இணைய, பெரும்பாலானோர் இதனை விரும்பி ரசிக்கவில்லை. இதன் காரணமாக அதன் வளர்ச்சியும் குறிப்பிட்ட சில இடங்களுடனேயே நின்றுவிட்டது.

இக்கலையில் பெண்ணினத்தில் பங்கும், அதனால் அவர்கள் எதிர்கொண்ட சிக்கல்களையும் இனிக் காண்போம்.

சங்க இலக்கிய காலத்தில் பெண்கள் இதில் பங்கு கொண்டனர். கோவில்களின் முன்பாக ஆடியவர்கள் பின் சமயப்பரம்பலை முக்கியமாகக் கொண்டு பல இடங்களிலும் ஆடினர். ஆனால் சமண, பௌத்தர்களின் வருகையால் இது நிறுத்தப்பட்டது. முன்னர் ஈழத்தில் ஆடப்பட்ட கூத்துக்களில் கூட இந்தியப் பெண்களே பங்கு கொண்டனர். இந்திய ஆண்களுடன் ஆடிய இவர்கள் பின் ஈழத்து கலைஞர்களுடனும் நடித்தனர். அவர்களை இவர்கள் 'சின்ன மேளக்காரிகள்' என்று கூறுவார்கள். அந்த வழிவந்த பெண்களே தொடர்ந்தும் பங்கு செலுத்தினர். ஆனால் திறமை இருந்தும் கூட ஈழத்துப்பெண்கள் துணிவு பெறவில்லை. 1980 ற்குப் பின்னர் முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும் அவை புதிய நவீன நாடகங்களுடனேயே நின்று கொண்டன. எனினும் பெரும்பாலானோர் இதற்குக்கூட துணிந்து முன்வரவில்லை எனலாம்.

ஏனெனில் சமூக அமைப்பே முக்கிய காரணமாக அமைந்துள்ளது. ஆடும் பெண்களை சமூகம் பார்க்கும் பார்வையும், அவர்களுடன் இணைந்து நடிக்கும் ஆண்களைக் கூட பாதித்தது. ஆகையினால் ஈழத்துப் பெண்கள் இதில் பங்கு கொள்ளத் தயங்கினார்கள். புராணக்கதைகளை மையமாக வைத்துப் பல கூத்துக்கள் எழுந்த போதிலும் பெண்களின் பிரச்சனைகளை எடுத்துக்காட்டும் ஒரு நாடகம் தன்னும் ஆடப்படவில்லை. மேலும் கூத்துப்படைக்கும் அண்ணாவிமார் அனைவருமே ஆண்களாக இருந்த காரணத்தினால் பெண்களின் பிரச்சனைகள் அவர்களுக்கு முக்கியமானதாகத் தெரியவில்லை. பண்டைய முறையிலேயே ஊறியிருந்தவர்களால் புதிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முறையில் எழுதமுடியவில்லை. அதனால் அவர்கள் எழுதவுமில்லை.

பெண்நடிகர், பெண்அண்ணாவி என்னும் முறையில் அலசி ஆராய்ந்து பார்த்ததில் பாஷையூர் பகுதியில் இரு பெண்களைத்தான் கண்டு கொள்ளக்கூடியதாக இருந்தது. அவர்கள் இருவருமே தாய், மகள் முறையானவர்கள். அவர்களில் எழுபது வயதினைத் தாண்டிய மனுவல் பாக்கியராசாத்தி என்பவரிடம்-

''கூத்தில் உங்களது பங்களிப்பு எவ்வாறு உள்ளது? எனக்கேட்டபோது, அவர் கூறினார்.

''44வயதினிலேயே நான் முதன் முறையாக நாடகம் ஆடினேன். 1967ம் ஆண்டு ''தேவசகாயம்'' என்னும் கிறிஸ்தவ நாடகத்தினை எழுதி (எனது கடைசி மகள் மூன்று வயது, அவளும் இதில் பங்கு கொள்ள) கோவில் முன்பாக மேடையேற்றினேன். ஊரில் உள்ளோர் முதலில், என்னைக் கேவலமாகத்தான் கதைத்தார்கள். நான் இதற்கொன்றும் அசைந்து கொடுக்கவில்லை. எனது கணவரும் இசையில் ஈடுபாடு மிக்கவராக இருந்த காரணத்தினால் பூரண ஒத்துழைப்புத் தந்தார். இதனை விடச் சிறப்பாகச் செய்யலாம் என ஊக்கம் தந்தார். எனக்கு சிறுவயது முதலே இசையில் மிகவும் நாட்டமுண்டு. ஆகையினால் சிரமம் ஒன்றும் இருக்கவில்லை. நிதிப் பிரச்சனைதான் முக்கியமானதாக இருந்தது. இன்றுவரை இயலுமான உதவிகளை கலை உலகிற்கு செய்துதான் வருகின்றேன்.

1967ல் மேடையேற்றப்பட்ட நாடகம் ஒன்றில் அனைத்துமே பெண்கள் தான் பங்கு கொண்டார்கள். இது ஒரு முக்கிய திருப்புமுனை எனலாம் என்று கூறி முடித்தார். இவரிடம் இருந்து விடை பெற்றுக் கொண்டு மகளான, திருமதி இராஜேஸ்வரி செபஸ்தியாம்பிள்ளை என்பவரைச் சந்தித்தோம். அவர் கூறினார்.

''நான் கலையில் வளர்வதற்கு எனது தாயார் பல விதத்தில் உதவியுள்ளார். எஸ். எஸ். சீ வரை படித்தேன். அவ்வேளையில் எனக்கு இதில் மிகவும் ஈடுபாடு இருந்தது. விளையாட்டுப்போட்டிகள் தொடக்கம் நடனம் நாடகம் என பலவற்றிலும் பங்கு பற்றினேன். இதன் காரணத்தினால் கலையை இயற்றி எழுதுவதில் சிரமம் இருக்கவில்லை. இன்றைய போர்க்காலச் சூழ்நிலையே என்னை எழுதத்தூண்டியது முழுமையான ஆட்டக்கூத்துக்களாக இல்லாது விட்டாலும், இசையுடன் கூடிய பழைய மரபிற்கமைய இக்காலச் சம்பவங்களை வைத்து 1990ல் தான் முதன் முதலாக கோட்டை வீழ்ச்சி பற்றிய கூத்தினை எழுதி பிள்ளைகளைக் கொண்டு மேடையேற்றினேன். பெரியவர்களும் இதில் நடித்துள்ளனர். முக்கியமாக பெண்களும் இதில் பங்கு கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது கூட இரு கூத்துக்களை எழுதியுள்ளேன். இக்காலச்சூழ்நிலையே இதன் கருவாக உள்ளது.

மேலும் எனது கணவரின் குடும்பம் இசையில் ஊறிய குடும்பமாகையால் பெரிதாக எது விதமான இடைஞ்சலும் எனக்கு வரவில்லை. கணவன் விரும்பாதவிடத்து பிரச்சனைகள் நிச்சயமாகத் தலைதூக்கத்தான் செய்யும். மேலும் எனது வேலைகள் அனைத்தையுமே முடித்துவிட்டுத்தான் பின்னர் எழுதுவேன். ஆகையினால் பிரச்சினைகள் குடும்பத்தினுள் எழ ஞாயமில்லை'' என்றார்.

''பெண்களின் பிரச்சினைகளை உள்ளடக்கிய கூத்துக்களை ஏன் எழுதவில்லை?'' என வினாவிய போது அவர் கூறினார்.

கூத்துக்களைத் தொடர்ந்து மேடையேற்ற பணம் முக்கியமாக வேண்டும். இந்நிலையில் ஊர் மக்களின் ஒத்துழைப்பினால் தான் அவை நடைபெற்றன. பண உதவி தந்து ஊக்கமும் படுத்துவார்கள். இந்நிலையில் பெண்களின் பிரச்சனைகளை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எழுதப்போனால் சமுதாயத்தில் பல சிக்கல் களை எதிர்கொள்ளவேண்டிவரும். ஆனா லும் எனது மனதில் அப்படியான ஒரு நாடகம் எழுதவேண்டும் என்ற எண்ணம் உண்டு. மிக விரைவில் அதை தயாரித்து வழங்குவேன்'' என்றார்.

''கணவர் ஒத்துழைப்பு தராதபட்சத் தில் நீங்கள் என்ன செய்வீர்கள்?'' எனக் கேட்டபோது

''கலையை யாராலும் தடுக்கவோ அழிக்கவோ முடியாது. என்னால் முடிந்த வரை அதனை எழுதி யாரிடமாவது கொடுத்தேனும் மேடையேற்றச் செய் வேன்'' என்றார்.

''கலைத்துறையில் ஈடுபடும்போது சமுதாயத்தில் எப்படியான தாக்கத்தினை எதிர் கொண்டீர்கள்? மேலும் கூத்துக் களில் பெண்கள் பங்குபெற முன்வராத தற்குக் காரணம் என்ன?'' என்று வினா வியவேளை, அவர் கூறினார்.

எங்களது சமுதாயத்தினைப் பொறுத்த வரையில் பெரிதாக ஒன்றும் எதிர்க்க வில்லை. ஒரு சிலரைத்தவிர மேலும் நான் மாணவியாக நடித்ததன் பின்னர் ஒரு பெண்களுமே துணிந்து முன்வரவில்லை. மேடையில் நடித்தால் பெண்களுக்கு மரியாதை போய்விடும் எனப் பயந்து அவர்களை நடிக்க விடுவதில்லை எனக் கூறிமுடித்தார். எமது இன்றைய சமுதா யத்தினைப் பொறுத்தவரையிலும் கூட பெண்களின் கலைத்துவத்தினை பூரண மாக ஏற்கும் மனப்பக்குவம் பெறவில்லை. ஆனால் ஒரு கலை பூரணத்துவம் பெற வேண்டுமெனில் அதில் பெண்களின் பங்க ளிப்பு மிகமிக அவசியம். நவீன யுகமான இக்காலத்திலே எமது பாரம்பரிய கூத்துக் கலைதனை பேணுவது முக்கிய கடமையா கும். பழையபுராணக் கதைகளையே தொடர்ந்தும் கூறுவதைவிடுத்து பெண்க ளின் பல்வேறு வகையான பிரச்சனைகளை மக்கள் மத்தியில் முன்வைத்து தெளிவு படுத்திக்கொள்ளலாம். இக்கலை தனியே ஆண்களுக்குரியதெனக்கொள்ளாது பெண் களும் தங்களது திறமைகளை வெளிக் கொணர முன்வர வேண்டும்.

அன்றிலிருந்து இன்றுவரை பெண் களின் பாத்திர அமைப்புக்களும் ஆண்களா லேயே ஆடப்பெற்று வருகின்றன. அந் நிலைதனை மாற்றி சரிநிகராக நமது ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும். பெண் களின் பிரச்சினைகளை பெண்களால்தான் விளக்க முடியும். ஆகையினால் எழுத்தாற் றலுள்ளோர் அதனை வளர்க்கவும் நடிப் பாற்றலுள்ளோர் அதனைப் பேணவும், மற்றோர் மத்தியில் அதனைப் பரப்பவும் முன்வர வேண்டும். ஆகவே சமுதாயத்தின் ஆணிவேராகத் திகழும் பெண்கள் பூரணத் துவமான பங்கினை வழங்கத் துணிந்து முன்வரல் அவசியமாகும். □

வெளிச்சத்தின் அடுத்த இதழ் (ஆவணி—94) சிறுகதைச் சிறப்பிதழாக வெளிவரவுள் ளது. இந்தச் சிறப்பிதழுக்கான படைப்புகளை முடிந்தவரை கூடியவிரைவில் எமக்கு அனுப்பிவையுங்கள்.

வெளிச்சம்
விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்
நடுவப்பணியகம், கோண்டாவில்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



□ உருவகம் □

# செயல் முறை



**நாக. பத்மநாதன்**

டிக் டிக், டிக் டிக் ...

சுவர் மணிக்கூடு ஓடிக்கொண்டே இருந்தது.

ஒரு வினாடிக்கு ஒரு 'டிக்' என அது ஓடிக்கொண்டே இருந்தது.

கணக்கிட்டேன்.

இவ்விதம் ஒரு நிமிடத்திற்கு அது காட்டவேண்டிய ஒலி - 60

ஒரு மணித்தியாலத்திற்கு? இந்த அறுபதை அறுபதால் பெருக்க-3600

ஒரு நாளுக்கு? இதனை 24 ஆல் பெருக்க - 86,400

அப்படியானால், 365 நாள்கொண்ட ஒரு வருடத்தில் இதைப் பெருக்கிப்பார்க்க வந்தது - 3,15,35000!

அப்பாடா! மூன்று கோடியே பதினைந்து இலட்சத்து முப்பத்தாறாயிரம் வினாடி அல்லது ஒலி!

இது முடியுமா?

மணிக்கூட்டின் சிறு சிரிப்புக்கேட்டது.

''என்னால் முடியும்'' என்றது அது.

''எவ்விதம்?''

''நான் கூட்டிப்பார்ப்பதில்லை. வரவரச் செய்வேன்''

மனிதர்களைப்போல, வருங்காலத்தைக் கூட்டிப்பார்த்து நான், நான் ஏங்குவதில்லை.

ஒரு வினாடிக்கு ஒரு 'டிக்' மட்டுமே நான் செய்வது.

''இது என்னால் சுலபமாய் முடியும்.''

ஏங்கிநின்ற என்னைப்பார்த்து அது மீண்டும் கூறிற்று-

''மனிதனே! நீ செய்ய இருப்பதையெல்லாம் வீணே கூட்டிப் பார்க்காதே! வரவர ஒவ்வொன்றாய் தெளிவோடு செய்.

எவ்வளவையும் செய்ய... உன்னால் முடியும் '' □□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கவிஞர்

# இ. முருகையன்

அவர்களுடன்

# நேர்காணல்

நேர்முகம்

கருணாகரன்



**தாங்கள் இலக்கியத்துறையில் ஈடுபடுவதற்குத் தங்களுடைய காலமும் சூழலும் எவ்வாறு காரணமாயின என்பதுபற்றிக் கூறுங்கள்:**

ஆரம்பத்தில், இலக்கியம் படைக்கிறேன் என்ற உணர்வு எனக்கு இருந்ததில்லை. ஆனாலும் எதையாவது எழுதுவேன். என்னுடைய தந்தையார் ஓர் ஆசிரியர். அவரிடம் நிறைய நூல்கள் இருந்தன. அவைபெரும்பாலும் பாட்டு நூல்கள். நான் அவற்றை

கவிதை, விமர்சனம், நாடகம் என கலை, இலக்கியத்தளத்தில் செயற்பட்டு வரும் கவிஞர் முருகையன், 1935ஆம் ஆண்டு சாவகச்சேரியைச் சேர்ந்த கல்வயலிற் பிறந்தவர். அறிவியலிலும் கலையிலும் கல்வி இயலிலும் பட்டங்கள் பெற்றவர். ஆசிரியர். அறிவியல் நூல் மொழிபெயர்ப்பாளர், தமிழ் மொழிப்பாடநூல் முதன்மைப் பதிப்பாசிரியர், கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளை வகித்தவர். இப்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முதுதுணைப் பதிவாளராய் உள்ளார். மிக நீண்ட காலமாக தமிழர் உரிமைகள் கிடைக்க வேண்டுமென்ற அக்கறையுடன் செயற்பட்டவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத்திற்காக குரலெழுப்பி வருபவர்.

இவர் எழுதி வெளியிட்ட நூல்களுள் 'ஒரு வரம்' என்பது சில ஆங்கிலக் கவிதைகளைத் தமிழாக்கம் செய்து தொகுத்தது. 'நெடும் பகல்', 'ஆதி பகவன்', 'அது அவர்கள்', 'மாடும் கயிறுகள் அறுக்கும்', 'நாங்கள் மனிதர்' என்பன கவிதை நூல்கள். 'வந்து சேர்ந்தன - தரிசனம்', 'கோபுரவாசல்' 'வெறியாட்டு', என்பன நாடகங்கள். 'ஒரு சில விதி செய்வோம்', 'இன்றைய உலகில் இலக்கியம்' என்பன இலக்கியத் திறனாய்வு நூல்கள். 'கவிதை நயம்' என்பது பேராசிரியர் க. கைலாசபதியுடன் சேர்ந்து எழுதியது. இவை தவிர, மேடைக்கெனவும் வானொலிக்கெனவும் பல நாடகங்கள் எழுதியுள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எடுத்துப்படிப்பேன். இப்படிப்படிக்கும் போது அந்தப்பாடல்களின்பால் ஒரு வகையான ஈர்ப்பு உண்டாயிற்று. ஒரு கட்டத்திலே, என்னாலும் பாட்டியற்ற முடியும் என்ற துணிவு எனக்கு ஏற்பட்டது.

நான், முதலிலே சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் பின்னர் யாழ் இந்துக்கல்லூரியிலும் படித்தேன். யாழ் இந்துவில் படிக்கும் வேளை 'இந்து இளைஞன்' என்ற பாடசாலைச் சஞ்சிகைக்கு என்று ஒரு சிறுபாட்டை இயற்றினேன். நான் எழுதியது எட்டுவரிப்பாடல். அது காந்தியடிகளைப் பற்றியது. ஆனால், அந்த இதழில் அது வெளிவரவில்லை. (பின்னர் ஒரு சமயம் அந்தக் கவிதையின் கையெழுத்துப்பிரதியைத் தந்தையார் கண்டபோது ''இதை எழுதியது யார்?'' எனக் கேட்டு, நான் என்று அறிந்ததும் மிகவும் மகிழ்ந்து பாராட்டினார்.)

யாழ் இந்துவில் நானும் கைலாசபதியும் ஒரேவகுப்பில் படித்தோம். பண்டிதர் க. செல்லத்துரை அவர்களும் வித்துவான் கார்த்திகேசு அவர்களும் தமிழ் ஆர்வத்தை ஊட்டி நம்மை வளர்த்தனர். க. சிங்காரம், நடனசபாபதி சர்மா முதலிய நண்பர்களும் எமது எழுத்துலக ஈடுபாட்டுக்குத் துணைநின்றனர். அப்பொழுது தொடக்கமே நம் ஆக்கங்கள் பத்திரிகைகளில் வெளியாகத் தொடங்கிவிட்டன.

1953 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானம் படிக்கும் பொருட்டு கொழும்பு சென்றேன். அந்த நாட்களிலேயே பத்திரிகை உலகுடன் தொடர்புகள் அதிகமாயின. 'சுதந்திரன்', 'வீரகேசரி', 'தினகரன்', என்பவற்றில் என் ஆக்கங்களும் வெளியாயின. ஈழகேசரியின் கொழும்புப் பிரதிநிதியாக செய்திக் கட்டுரைகளையும் கலை விமர்சனங்களையும் எழுதிக்கொண்டிருந்தேன். பின்னர் 'கலைமகள்', 'அமுதசுரபி', 'கல்கி' போன்ற இதழ்களிலும் அவ்வப்போது என் கவிதைகள் சில தலைகாட்டின.



●● உங்களுடன் இலக்கிய நண்பர்களாகச் செயற்பட்டவர்கள் பற்றி ..

□□ மகாகவி, கைலாசபதி, சிவத்தம்பி, சில்லையூர், புதுவை ஆகியோர் இலக்கியத்துறையில் எனக்குப் பிரியமானவர்களிற் சிலர், என்னுடைய இலக்கிய ஈடுபாட்டிலும் வளர்ச்சியிலும் அவர்கள் பெரிதும் உதவினர். 1953, 54 இல் என நினைக்கிறேன், ''மகாகவி'' யின் தொடர்பு கிடைத்தது. அவரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதன் முதல் அவரது அலுவலகத்தில் சந்தித்தேன். காலநேரமின்றி இலக்கியம் பற்றியே பேசுவோம். எனக்கு இயல்பாகவே கூச்சசுபாவம். அவருடைய அலுவலகத்தில் இப்படி மணிக்கணக்காக இருந்து கதைப்பதா என எனக்குச் சங்கடம். ஆனால் ''மகாகவி'' வேலைகளையெல்லாம் விரைவாக முடித்து விட்டு நீண்ட நேரமாகப் பேசிக்கொண்டிருப்பார். பல விடயங்களைப்பற்றிப் பேசுவோம். புதிய கருத்துகள், புதியமுயற்சிகள் பற்றிச் சிந்திப்போம். ''மகாகவி'' இரவு பகல் வீடுவெளி எங்கும் எப்போதும் கவிதைபற்றிச் சிந்தித்தவர். கவிதைக்கலைக்காகவே தம்மை முழுமையாக அர்ப்பணிக்கும் ஆழ்ந்த ஈடுபாடு அவருக்கிருந்தது. படைப்பு மனநிலை என்பதை எங்கள் உரையாடல்கள், சந்திப்புகள், அனுபவங்கள் மூலமாக வளர்த்துக்கொண்டோம். ''மகாகவி''யின் கவிதைப் போக்கும், என்னுடைய கவிதைப் போக்கும் அடுத்த கட்டங்களுக்கு நகர்ந்தன. நமது சந்திப்புகளும் விமர்சனங்களும் கலந்துரையாடல்களும் புதிய பல விளக்கங்களும் கண்டுபிடிப்புக்களுக்கும் காலாயின. அந்தக் கொடுக்கல் வாங்கல்களினால் இருவரும் நன்மையடைந்தோம்.

●● *ஈழத்துக் கவிதைத்துறையின் முக்கியமானவர்களில் ஒருவராகத் தங்களைக் கருதுகிறோம். எனவே தமிழ்கவிதையின் பரிமாணத்தையும், பரிணாமத்தையும் இன்றைய செல்நெறியையும் பற்றிச் சொல்லுங்கள்?*

□□ புதுக்கவிதை மரபுக்கவிதை என்பது பிழையான பிரிப்பு. யாப்புக்கவிதை யாப்பில்லாக்கவிதை என்று சொல்லலாம். ''யாப்புக்கமையவும் யாப்பறுத்தெறிந்தும் / பாக்கள் பிறக்கலாம், பைந்தமிழ் சிறக்கலாம்'' என்பதே எனது நிலைப்பாடு. தமிழ்க் கவிதையின் பரிமாணம் என்று சொன்னால் 'சான்றோர் கவிதை' என்ற சங்ககாலக் கவிதைகளில் ஓசையமைவு உண்டு. பிறகு காலத்தோடு ஒட்டிப்பல மாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. உண்மையில்



பழங்காலப் படைப்புக்களைப்பொறுத்தவரையில் இசைப்பாட்டு, இயற்பாட்டு என்ற பேதங்கள் இருக்கவில்லை. சமூகநிலை மாற்றங்களுடனேயே தமிழ்ச் செய்யுள் இசைப்பாட்டாகவும் இயற்பாட்டாகவும் பிரிந்துள்ளது என்று சொல்ல வேண்டும். இவை இரண்டும் சந்தித்தும் பிரிந்தும் வந்துள்ளன. ஓர் இயங்கியல் முறையிலேயே இந்த வளர்ச்சி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிகழ்ந்து வந்துள்ளது. இப்போதுள்ள
பிரிவு (இசை - இயல்) நிரந்தரமானது
என்றும் எதிர்வு கூறமுடியாது.

யாப்புக் கவிதையில் அமைந்திருக்கின்ற
தேவையில்லாத, நலிவுபடுத்தக்கூடிய
பண்புகளைத்துறக்கும் போது
அது புதுக்கவிதைக்கு வந்து சேருகிறது.

இனிவரும் காலத்திலும் யாப்பில்லாக்
கவிதையில் இப்போதுமேலோங்கியிருக்கின்ற
சில கூறுகள் பயனற்றவையென்றோ,
அறியாமையின் பாற்பட்டவை
என்றோ ஆகிவிடும்.
ஒரு வளர்ச்சி வரலாற்று
இயக்கத்தின்படி இந்தச் சுழற்சி
இசைந்தும் பிரிந்தும் செல்லும்.
அப்படிப்பட்ட கூறுகளில் ஒன்று.

"இன்று எம்மைச்சுற்றி நடக்கின்ற நிகழ்ச்சிகளில் இருந்து எவ்வாறு நாம் ஒதுங்கமுடியும்? இப்பொழுது இங்கே நடந்துகொண்டிருக்கும் முக்கிய நிகழ்ச்சி விடுதலைப் போராட்டம்; விடுவிப்பு வேள்வி. மொழியின் பேராலும் இனத்தின் பேராலும், மதத்தின் பேராலும் மேலாண்மை கொள்ள வேண்டும் என்ற அநீதிக்கெதிரான இயக்கம், அதன் அடியாக எழும் எண்ணங்களும் உணர்வுகளும் நமது படைப்புகளில் இடம் பெறுவது இயல்பு தான். அது மாத்திரமல்ல. அவ்வண்ணம் அமைவது இன்றியமையாததும் கூட. இதற்கு உதவாத எழுத்து எதற்கு உதவப்போகிறது"

யாப்பில்லாக்கவிதையானது
யாப்புக்கவிதையின் சில பண்புகளை
உள்வாங்கிக் கொண்டு பிறிதொரு
கட்டத்துக்கு வந்து சேரும்போது
புதியதொரு சங்கமம் உண்டாகும்.
இன்று சொல்லப்படும் படிமம், குறியீடு,
ஒத்திசையென்றவையெல்லாம்
முன்னரே இருந்திருக்கின்றன. ஆனால்
அவற்றுக்குக் கொடுக்கப்பட்ட
அழுத்தங்களும் முக்கியத்துவமும்
இப்போதுள்ளதைப் போல
இருக்கவில்லை.

தமக்கும் விளங்காமல், பிறர்க்கும்
விளங்காமல் எழுதுகின்ற போக்கு. இன்று
இது சில கவிஞர்களிடமுண்டு.
இதனை இருண்மை என்றும்
சொல்லுகிறார்கள்.
இந்த இருண்மை வருங்காலத்திலே
நிராகரிக்கவும் படலாம்.
பழமையும், புதுமையும் ஒன்றையொன்று
அணுகிக் கொண்டிருக்கின்ற இயக்கம்
முழுமை பெறாதபடியால்
தடுமாற்றங்கள் இருக்கின்றன.
காலப்போக்கிலே தெளிவு ஏற்படும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*●● கவிதை துறையில் நீங்கள் அதிகமான ஈடுபாட்டைக் காட்டிய போதும் நாடகம், விமர்சனம், அறிவியல் சார்ந்த பிற துறைகளிலும் தங்களைக் குறிப்பிடத்தக்களவு அடையாளப்படுத்தியுள்ளீர்கள். இன்றைய கலை, இலக்கியப் போக்குகளில் இத் துறைகளின் வளர்ச்சி எத்தகையதாகக் காணப்படுகின்றது?*

□□ எந்தக் கவிதையுமே ஒரு நாடகம் என்றும் நாம் எடுத்துக் கொள்ளலாம். கவிஞனின் 'நான், நான்' என்று வரும் குரல் ஒரு பாத்திரத்தின் குரலாகவே காணப்படுகிறது. 'நான்' என்பது தனியானதல்ல. ஒரு தனியாளின் உணர்வு கலைகளில் பெறுமதி வாய்ந்ததாக வருவது எப்படி? அந்த உணர்வு பல தனியாட்களின் உணர்வுகளைத் தழுவியதாகவும் ஒரு பொதுமைப் பண்பு வாய்ந்ததாகவும் அமைகின்றது. இதைத்தான் இலக்கியத்தில் 'வகைமாதிரி' என்று குறிப்பிடுகிறார்கள். கவிதை என்பதே பாத்திரங்களின் கூற்றுத்தான். பெரிய கவிதைகளை எழுதும்போது பல்வேறு பாத்திரங்கள் வருகின்றன. இவைகள் தான் நாடகங்களின் வித்துக்கள். இந்த வகையாக என்னுடைய கவிதையிலே ஏற்பட்ட வளர்ச்சி தான் நாடகம் எழுத வேண்டும் என்ற உந்துதலாக வந்தது. திருவானைக்காவைச் சேர்ந்த கலைவாணன் போன்ற கவிஞர்கள் கவிதை நாடகங்களை இயற்றினர். அவை வானொலியில் ஒலிபரப்பானதும் உண்டு. இளமைக்காலத்தில் அந்தக் கவிதை நாடகங்களைக் கேட்ட அருட்டுணர்வினாலே நானும் சில நாடகங்கள் எழுதத் தொடங்கினேன். மேற்கு நாடுகளிலே பல கவிதை நாடகங்கள் இலக்கியக்கலையின் உச்சத்தைத் தொட்டுச் சிறந்திருக்கின்றன. தமிழிலும் இந்த விதமான முயற்சிகள் நடக்க வேண்டும். என்ற ஆர்வம் எனக்குண்டு.

விமர்சனத்துறை பற்றி இனிச் சொல்லுகிறேன். ஆக்கமொன்றைச் செய்யும் போது, அதையாரோ நுகரவேண்டும். இப்போதுள்ளதை விடக்கூடிய தரத்திலேதான் புதிய ஆக்கங்களை நாம் செய்யவேண்டும். புத்தாக்கங்களை நாங்கள் நுகர்ச்சியாளர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். பரிச்சயப்படுத்த வேண்டும். வாசகர்களைப் படைப்பாளியிடம் அழைத்துச் செல்வதுதான் விமர்சனத்தின் பணி. படைப்பாளியும் வெறுமனே கற்பனையில் இருந்து படைக்க முடியாது. படைப்பாளி விமர்சகனின் உதவியுடன் வாசகனையும் தன்னோடு அழைத்துச் செல்ல வேண்டும்.

எனது 'நெடும்பகல்' இந்த வகையில் முன்னுதாரணம் எதுவுமே இல்லாத புத்தம் புதிய படைப்பு. அதனை இன்னும் சரியாக எவரும் மதிப்பிடவில்லை. இவ்வாறே நானும் ''மகாகவி''யும் இணைந்து எழுதிய 'தகனமும்' சரியான ரீதியில் விமர்சிக்கப்படவில்லை.

அறிவியல் பற்றியும் கேட்டீர்கள். எனது முதலாவது பட்டப்படிப்பு விஞ்ஞானத்துறை சார்ந்தது. இதனாற்போலும் எனது கலைப்பார்வையும் விஞ்ஞான நோக்கினதாகவே அமைகின்றது. எனது தொழிலும் இதனுடன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடர்புபட்டிருந்தது.
விஞ்ஞான பாடத்தை மொழிமாற்றம் செய்வது, விஞ்ஞானக்கலைச்சொற்களை ஆக்குவது என்ற வகையிலே என்னுடைய தொழில் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் அமையலாயிற்று.
விஞ்ஞானம் படித்தவன் என்ற முறையிலே, விஞ்ஞான வளர்ச்சி, மாற்றம் என்பனவற்றை அவதானித்து வந்துள்ளேன். பண்பாடு என்னும் பொழுது அரசியல், தத்துவம், தொழில்நுட்பம் இவையெல்லாம் இணைந்தே இருக்க வேண்டும். எனக்கருதுகின்றேன்.
தனியே கலையும், இலக்கியமும் மட்டும்தான் பண்பாடு என மயங்குவது தவறாகும்.
விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் நடைமுறை வாழ்க்கையிலும் சிந்தனை நெறிகளிலும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
பண்பாடு என்று வரும்பொழுது விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மிக முக்கியமான கூறுகளாக அதில் அடங்கியிருக்க வேண்டும்.
எனது சமூகப் பார்வையும் இதையொட்டியே இருக்கின்றது.

**●● இது உரை நடை யுகம் என்று சொல்லப்படுகின்றது. இதை நீங்கள் ஏற்றுக் கொள்ளுகின்றீர்களா? ஏற்றுக் கொள்வதாக இருந்தால் எந்த அடிப்படையில்? இல்லையெனில் உங்கள் கருத்தென்ன? கவிதையின் இடம் எது?**

□□ மொழி எத்தனையோ நோக்கங்களுக்காகப் பயன்படுகிறது.
அந்த நோக்கங்களுக்கேற்ப அதனுடைய அமைப்பும் வேறுபடுகிறது.
நிகழ்கால வாழ்க்கையின் பல்வேறு நோக்கங்களுக்கும் உரைநடைதான் ஊடகமாக இருக்கிறது.
அந்த வகையில் இது உரைநடை யுகம் என்று கொள்வது மிகவும் பொருத்தமானது.
அதே நேரத்தில் கவிதையோ கலைத்துறைக்குரியது. மொழிவாயிலாக வெளிப்படும் கலைகளில் கவிதை நீண்ட வரலாற்றையும் தலை சிறந்த இடத்தையும் பெற்றிருக்கிறது.
ஆனால் முற்காலத்தில் இருந்ததைப் போல எல்லா அறிவு நூல்களையும் (மருத்துவம் - சோதிடம் போன்றவை அனைத்தையும்) பாட்டாகவே எழுத வேண்டுமென்ற தேவை இப்பொழுது இல்லை.
பண்டைக்காலத்திலே சோதிடம், கணிதம், மருத்துவம், இலக்கணம் உட்பட சித்தாந்தங்கள் சாத்திரங்கள் அனைத்துமே சூத்திர வடிவில் பாட்டுகளாக இயற்றப்பட்டன. இவ்வித நோக்கங்களுக்கு இன்று கவிதை பயன்படாது.
ஆனால் கலைப்படைப்பு என்ற வகையில் சொற்களின் அரசியாக, கவிதை இன்றும் வளர்ந்து வருகின்றது.

**●● இன்றைய இளந்தலைமுறையின் இலக்கிய முயற்சிகள் பற்றிய உங்கள் கருத்துகள் என்ன?**

□□ இலக்கிய முயற்சிகளில் மிகுந்த ஆர்வம் இப்பொழுது இருக்கின்றது. நேரடியாக அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்புகள் அமைய வேண்டும்.
உதாரணமாக லெஸ்ற்றர் ஜேம்ஸ் பீரிஸின் திரைப்படங்கள் வாழ்க்கையையே பேசுகின்றன.
அல்லது மாட்டின் விக்கிரமசிங்ஹ வின் 'கம்பெரலிய' என்ற நாவல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



வாழ்க்கையை நேரடியாக
எவ்விதமான இடையீடுமின்றிச்
சித்திரிக்கின்றது.
அதனால் அவை சிறந்த படமென்றும் சிறந்த
நாவலென்றும் பாராட்டப்படுகின்றன.
ஆனால் ஒரு படம் வாழ்க்கையின்
பிரதியின் பிரதியின் பிரதியின் பிரதியாக
இருந்தால் எவ்வாறு சிறப்பாக
முடியும்?
ஆகவே கலைஞர்கள் நிகழ்கால
அனுபவங்களை அடிப்படையாகக்
கொண்டு, தமக்கு ஏற்ற
உத்திகளைத் தாமே படைத்துக்கொண்டு
கலையாக்கத்தில் ஈடுபட்டால்
அவை சிறந்தனவாக அமையும்.
இன்னைய இளந்தலைமுறையினர்
நடப்பியல் வாழ்க்கையில் மிகவும்
நெருக்கமான அக்கறையுடையவர்களாக
இருப்பதை நாங்கள் பார்க்கிறோம்.
ஆகையால் அவர்களின் படைப்புகளில்
உயிர்ப்புள்ள பல அம்சங்கள்
நிறைந்துள்ளன.
தங்கள் திறமைகளை அவர்கள் சரியாக
அடையாளம் கண்டுகொண்டால்
இன்னும் உயரியசிகரங்களை
அடையலாம்.

●● *வளர்ந்து உச்சத்தைத் தொட்டு நிற்கின்ற தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றியும் போராட்ட இலக்கை நோக்கி நகர்த்தப்படுகின்ற படைப்புகள் பற்றியும் அவற்றின் வலுபற்றியும் கூறுங்கள்?*

□□ நான் இலக்கியத்தை அடையாளம்
கண்டு மக்களுக்காக அவற்றைப்
படைக்கத் தொடங்கிய
காலத்திலிருந்தே சமூக அக்கறை
கொண்டவனாக இருக்கிறேன்.
தமிழர் விடுதலைக்கான எண்ணங்கள்
கிளம்பத் தொடங்கிய காலத்திலிருந்தே
அதாவது 1956க்கு முன்பிருந்தே
தமிழர் உரிமைக்காகப் பாடிவந்திருக்கிறேன்.
அப்போது 'சுதந்திரனிலும்'
ஈழகேசரியிலும், 'தேன்மொழி',
'இனமுழக்கம்', 'அல்லி' முதலான பிற
ஏடுகளிலும் எழுதியுள்ளேன்.
பின்னர் தமிழரசுக்கட்சியின்
சில போக்குகளும் செயல்களும்
வேறுவிதமாக மாறின.
அந்த போக்குகளை விமரிசனம் செய்து
'யாத்திரை பல வகை', 'வெட்கம்
கொள்ளுக' போன்ற கவிதைகளில்
எனது உணர்வை
வெளிப்படுத்தியிருக்கிறேன்.
பின்னர் எனக்குச் சமதர்மக் கொள்கையில்
இருந்த பிடிப்பு வலிமை பெற்றது.



இந்தச் சந்தர்ப்பத்தில்
இடது சாரிகளுடன் எனது தொடர்பு
அதிகமாயிற்று. ஒரு கட்டத்திலே,
இடதுசாரி இயக்கம்
பிளவுபட்டது.
எழுத்தாளர் இயக்கத்திலும்
விரிசல் ஏற்பட்டது. ஒன்றிணைக்கப்
பாடுபட்டார்கள்.
ஆனால் இணைக்கமுடியவில்லை.
இன்று எம்மைச்சுற்றி நடக்கின்ற
நிகழ்ச்சிகளில் இருந்து எவ்வாறு
நாம் ஒதுங்கமுடியும்?
இப்பொழுது இங்கே நடந்துகொண்டிருக்கும்
முக்கிய நிகழ்ச்சி விடுதலைப் போராட்டம்;
விடுவிப்பு வேள்வி; மொழியின்

www.tamilarangam.net



பேராலும் இனத்தின் பேராலும், மதத்தின் பேராலும் மேலாண்மை கொள்ளவேண்டும் என்ற அநீதிக்கெதிரான இயக்கம். அதன் அடியாக எழும் எண்ணங்களும் உணர்வுகளும் நமது படைப்புகளில் இடம் பெறுவது இயல்புதான். அது மாத்திரமல்ல. அவ்வண்ணம் அமைவது இன்றியமையாததும் கூட. இதற்கு உதவாத எழுத்து எதற்கு உதவப்போகிறது?

●● *இன்றைய எமது காலச்சூழலில் ஒரு படைப்பாளியின் முக்கிய பங்களிப்பு எப்படி அமைய வேண்டுமென நீங்கள் கருதுகிறீர்கள்?*

□□ இன்றைய சூழலை அவதானித்து அதன் மெய்மைத்தன்மையைப் பிரதிபலிக்கும்படி ஒரு படைப்பாளி படைப்பில் ஈடுபடுதல் வேண்டும். இதழ்களில் எழுதுவது, நாடகம் கவியரங்கு முதலான மேடை நிகழ்ச்சிகளை வழங்குவது ஆகிய முயற்சிகள் அனைத்தும் அவசியம். இதழ்களையும் நூல்களையும் வெளியிடுவதிலே இன்று எவ்வளவோ சிரமங்கள் உண்டு. ஆனாலும் நாமெதையும் செய்யாமல் சும்மா இருக்கவில்லை. இந்த மட்டுப்பாடுகள் இருப்பினும் செழிப்பாகப் பல நிகழ்வுகள் நடக்கின்றன. கவியரங்குகள் மூலம் பல விடயங்களைத் தாக்கமாக மக்கள் முன் வைத்து வருகிறோம். கவியரங்கின் வெற்றி ஒரு நிறுவனமாகியுள்ளது. முந்திய கவியரங்குகளை விட இன்றைய கவியரங்குகள் காத்திரமாக அமைகின்றன. புதியவர்களின் மனப்பதிவுகள் அதிகமதிகமாக துலங்கி ஒளிர்கின்றன. நாடகங்களில் ஆடல் பாடல்கள் இப்போது முக்கியம். முன்னர் சொல்தான் பிரதானம். இப்பொழுது நாடகத்தில் நடிப்பவர்களுக்கு ஆடல் உடற்பயிற்சி கொடுப்பது போல், சொற்களை அரங்கில் தெளிவாக உச்சரிப்பதற்கும் பயிற்சி அளித்தல் வேண்டும். இந்தப் பயிற்சியின்மையால் நாடகங்கள் முழுமையாக மக்களிடம் சென்று சேர்வதிலே தடங்கல்கள் நேர்கின்றன. இது விரும்பத்தக்கதல்ல. ஒரு படைப்பாளி இவற்றிலெல்லாம் கவனம் செலுத்துதல் நல்லது. □□


## மிக விரைவில் வெளி வருகிறது

# "இன்னும் ஒரு நாடு"

**தயாரிப்பு** : முல்லை மாவட்ட கலை, பண்பாட்டுக் கழகம்
**இசை** : கோ. முரளி
**பாடல்கள்** : புதுவை இரத்தினதுரை
**கதை திரைக்கதை வசனம் நெறியாள்கை**: பொ. தாசன்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எல்லாளன் குளம்

## □ ஒரு வரலாற்றுக் குறிப்பு □




இலங்கையின் வரலாற்று மரபு பதியப்பட்டுச்சென்ற முறையில் ஏற்பட்ட பிறழ்வினால் பல பின்விளைவுகள் உருவாகியுள்ளன. வில்லியம் கைகர் குறிப்பிட்டது போன்று இலங்கையின் வரலாற்று மரபில் (மகாவம்சத்தில்) பதியப்பட்டவற்றை விட விலக்கப்பட்டுள்ளவையே இன்று இத்தீவின் பிரச்சினைகளுள் முக்கியமானவையாகும் என்பது இங்கு நோக்கத்தக்கது. பதியப்பட்டுச் சென்றவற்றுள் கூட இனங்காணப்பட்டு எவ்வழியிலேனும் தீர்வு காணமுடியாத வகையில் உள்ள சம்பவத் தொடர்களும், இடையீடுகளும், அடையாளம் காணப்படமுடியாதவகையில் அமைந்த ஆட்சியாளர்களது பெயர்வடிவங்களும் இன்று இலங்கையின் வரலாற்றுப் பிரச்சினைகளுள் தீர்க்கப்பட முடியாதவையாக

**செ. கிருஷ்ணராசா**
*முது நிலை விரிவுரையாளர்*
*வரலாற்றுத்துறை*
*யாழ். பல்கலைக் கழகம்*

உள்ளன. G.C. மெண்டிஸ் போன்ற வரலாற்று ஆசிரியர்கள் இப்பிரச்சினைகள் தொடர்பாக நன்கு ஆராய்ந்துள்ளனர். இவ்வாறான வரலாற்றுச் சிக்கல்கள் இலங்கை வரலாறு பொறுத்து தோற்றம் பெற்றதற்கான பிரதான அடிப்படையாக அமைந்தது பாளி மொழியே. வரலாற்று மரபு பாளி மொழியில் பதிவு செய்யப்பட்டமையே முதலாம்தர சிக்கல்களைத் தோற்றுவித்த காரணியாயிற்று.

பௌத்த மதத்தின் செல்வாக்கினூடாகஇம்மொழி இலங்கையில் தனக்குரிய தளத்தினை அமைத்துக்கொள்ள விழைந்த நிகழ்வு காலப்போக்கில் இங்கிருந்திருக்கக் கூடிய பிற வழிபாட்டு மொழிகளிடையே (Religious Languages) பிளவினை ஏற்படுத்தி நின்று, அதன் தொடர்ச்சியாக இனங்களுக்கிடையேயான பிறழ்வாகவும் உருவாக வழி அமைத்தது. இதன் விளைவாக பாளிமொழிக்குடும்பத்துடன் சம்பந்தப்படாத பிற சுதேச மொழிவழிப்பெயர்கள்- இடங்கள்- கடவுளர்கள் ஆகியன பாளிமொழியில் பதிவு செய்யப்பட்ட பொழுது அவை வழங்கப்பட்ட மொழி வழக்கினின்றும் மாற்றம் செய்யப்பட்டோ அல்லது உருக்குலைக்கப்பட்ட முறையிலோ மேற்கொள்ளப்பட்டன என்பது தெளிவாகின்றது. (ஒருவேளை பாளிமொழியின் இயல்பு காரணமாகவும் அவ்வாறு ஏற்பட்டதாகக் கொள்ள முடியும்.)

இப்பின்னணியிலேயே கிறீஸ்த்துவுக்கு முற்பட்ட - பிற்பட்ட காலகட்டங்களில் அனுராதபுரத்தில் அதிகாரத்திலிருந்த திராவிட வம்ச ஆட்சியாளர்களது பெயர்கள் பெரிதும் திரிபு படுத்தப்பட்ட வகையில் பாளிமொழியில் வரலாற்று மரபின் கண் இணைக்கப்பட்டது. (கி.பி. 4ம் நூற்றாண்டில் முதன்முதலாக தீபவங்ஸ என்ற வரலாற்று மரபு பதிவு செய்யப்பட்டது.) இவ்வாறு இணைக்கப்பட்ட திராவிட வம்ச ஆட்சியாளர்களது பெயர்களையோ— சாதனைகளையோ சமகால சாசன வழக்கினூடுதன்னிலும் அடையாளம் கண்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொள்ள முடியாத வகையில் அவ் வரலாற்றுப் பிரச்சினை இன்று வரைக்கும் தொடர்வதனைக் காண்கின்றோம்.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட சகாப்தத்தில் ஏறத்தாழ 88 வருடங்களாக திராவிட வம்ச ஆட்சியாளர்கள் அனுராதபுரத்தில் இடைவிட்டு ஆட்சியை நடாத்தியிருந்தமையை இப்பாளிப்பதிவு நிரலிலிருந்தே கண்டு கொள்கின்றோம். ஆனால் அவ்வாட்சியாளர்களது பெயர்கள் வேறு எவ்விடத்திலுமே அடையாளம் கண்டு கொள்ள முடியாத வகையில் திரிபு படுத்தப்பட்டு பெயர் குறிக்கப்டுள்ளமையைக் காணலாம். சமகாலத் தமிழகத்தில் சங்ககாலக்குறுநில மன்னர் பலரது பெயர்கள் (சங்க இலக்கியங்கள் தந்தவை) தொல்லியற்சான்றுகள் வாயிலாக மேலும் உறுதிசெய்யப்பட்டு விட்டன. ஆனால் ஈழத்துப் பாளிப்பெயர்கள் மாத்திரம் ஏன் இன்னும் தெளிவாக அடையாளம் காண முடியாதுள்ளது என்று சிந்தித்தால் அது இலங்கை மரபில் ஏற்படுத்தப்பட்ட வரலாற்றுப் பிறழ்வினையே வெளிப்படுத்தி நிற்கும். வட இந்தியப் பேரரசனான அசோகன் தனது 2வது, 13வது கிர்னார் பாறைப் பிரகடனங்களில் தனது பேரரசின் அயல் நாடுகளாக "சேர, சோட, பாட, சத்தியபுத்ரோ, கேரளபுத்ரோ, தாம்பிர பருணி" என பிராகிருதமொழியில் வரைந்துள்ளமையைக் காண்கின்றோம். இப்பெயர் வரிசையில் அடையாளம் காணப்படாதிருந்த 'சத்திய புத்ரோ' என்பவர்களை சங்ககாலத்து குறுநில மன்னர் பரம்பரையில் ஆட்சிபுரிந்த அதியமான் நெடுமான் அஞ்சியுடன் ஆய்வாளர் அடையாளம் கண்டுள்ளனர். அம்மன்னனுடைய நாணய வெளியீடு ஒன்றும் 'சத்தியபுத்ர' என்ற பொறிப்புடன் அண்மையில் தமிழகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டமையானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது. இம்மன்னனே 'நெடுங்காலம் வாழ்வதற்கான நெல்லிக்கனியை ஔவையாருக்குக் கொடுத்துப் புகழ் பெற்றான்' எனவும் குறிப்பிடப்படுகிறது. தமிழக நிலை இவ்வாறாயின் இலங்கையின் இந்நிலைக்குக் காரணம் என்ன? பாளி மொழியை பதிவேட்டு மொழியாகப் பயன்படுத்தியமையா? இதுவே திராவிட மன்னர்களது பெயர் வடிவத்தின் குழப்பத்திற்குக் காரணமா? அனுரதபுரத்தில் 44 வருட காலம் ஆளுமையுடனும் சாதனைகளுடனும் ஆட்சி செய்த எல்லாளன் என்ற தமிழ் மன்னனது பெயர் எவ்வாறு இலங்கை வரலாற்று மரபில் சிதைவுற்றது? அவனது சாதனைகள் யாவுமே பதிவு செய்யப்படாமல் மறைக்கப்பட்டே விட்டன. இந்நிலையில் இக்கட்டுரையின் நோக்கமானது எல்லாளனுடைய பெயரில் குடாநாட்டின் கண் உள்ள வடமராட்சிப் பரப்பில் காணப்படும் ஒரு குளத்தின் பெயர், பின்பு கிராமத்தின் பெயராக மாற்றம் பெற்றுக் காணப்படுவதனை எடுத்துக் காட்டுவதாக அமையும். 'எலாரா' என்று பாளி மொழியில் பதியப்பட்ட மன்னனை 'எல்லாளன்' என்றும் 'ஈழராசா' என்றும் எமது ஆய்வாளர் சிலர் அடையாளம் கண்டுள்ளனர். இருப்பினும் அம்மன்னனது பெயரில் உள்ள ஒரு நீர்ப்பாசன நிறுவனத்தின் பெயர் பின்னர் கிராமத்தின் பெயராக மாற்றம் பெற்றுக் கொண்டிருந்தமையை இச் சிறுகட்டுரை முதன்முதலாக வெளிப்படுத்த எத்தனிக்கின்றது.

வடமராட்சிப்பரப்பில் உள்ள உடுப்பிட்டிப் பிராந்தியத்தில் உள்ளடக்கப்பட்ட ஒரு பழமையான கிராமமாகக் காணப்படுவது எள்ளன் குளமாகும். எள்ளன் குளம் என்ற பெயர் அக்கிராமத்தின் மத்தியிலுள்ள ஒரு சிறிய நீர்ப்பாசனக்குளத்துக் குரியதாக வழங்கி, பின்னர் கிராமத்தின் பெயராக மாற்றமடைந்தது. எள்ளன் குளம் என்ற பதமானது எல்லாளன் குளம் என்ற அதன் பழைய பெயர் வடிவிலிருந்தே மருவியதாகக் கொள்ளவேண்டும். மொழியியல் ரீதியாகவும் அவ்வழக்கினுடைய மருவுநிலை ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே உள்ளது. (வடமராட்சியிலுள்ள 'கங்குண்டான்' என்ற கிராமத்தின் பெயர் 'கங்கை கொண்டான்' என்ற அதன் ஆரம்பப் பெயர் வழக்கினின்றும் மருவி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யதை தோம்புப்பதிவுகள் உறுதிப்படுத்தியுள்ளமை இங்கு எடுத்துக்காட்டத்தக்கது.) எனவே எல்லாளன் குளம் என்பதையே தற்காலத்தில் நாம் வழங்கும் எள்ளன் குளம் என்ற பதம் உணர்த்தி நிற்கின்ற தென்றால் அது தவறாகாது.

எள்ளன் குளம் என்ற கிராமம் மிகவும் பழமை வாய்ந்த ஒரு பரப்பாகும். இங்கிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தொல்லியல் எச்சங்கள் ஆதிக்குடியிருப்பு ஒன்றினது தொடர்ச்சியை இனங்காணத்தக்க வகையில் சான்றுகளை உள்ளடக்கியுள்ளன. இடுகாடும் குளமும் இணைந்த வகையில் அருகருகே அமைந்து காணப்படுகின்ற ஒரு பண்பு அதன் சிறப்பியல்புகளுள் ஒன்றாகும். மேட்டு நிலப்பயிர்ச்செய்கையும், நெற்செய்கையும் இங்கு தனித்துவமானவை எள்ளன் குளத்தின் மத்தியில் 'கொல்லன் பனையடி' என்ற பெயரால் அழைக்கப்படும் ஒரு திட்டி அதன் எல்லா மண்படை அடுக்குகளிலும் ஏராளமான கீச்சுக் கிட்டங்களைக் (Iron Slag) கொண்டிருப்பது தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை வெளிப்படுத்துகின்றது. இதுவே அங்கு தொடர்ச்சியான ஒரு விவசாயக் குளக்குடியிருப்பின் வளர்ச்சியையும் உறுதிப்படுத்துகின்ற தொல்லியல் மூலமாகவும் அமைகிறது. (இதனுடைய தொடர்ச்சியும் வளர்ச்சியுமாகவே இன்று உடுப்பிட்டியின் இரும்பு உலோகத் தொழினுட்பமும் தரமும் அமைந்து காணப்படுவதையும் மனங்கொள்ளல் நன்று.)

எள்ளன் குளத்தில் பெருங்கற்கால மக்களின் முதுமக்கட்தாழி அடக்கமுறை பயிலப்பட்டிருந்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. மனிதசாம்பலும் - எலும்புத் துண்டுகளும் நிறைந்த பெரிய ஒரு மட்கலம் அங்குள்ள இடுகாட்டின் மத்தியில் கிணறு தோண்டப்பட்டபோது வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இங்கு நாச்சிமார் கோவில் பிரகாரம் இடுக்காட்டுடன் மருவிக்காணப்படுவது எள்ளன் குளக் கிராமத்தின் பழமையை உறுதி செய்வதாக உள்ளது. இங்கு இற்றைவரைக்கும் வேள்வி-யாகங்கள் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டு வருவதனையும் காணலாம்.

எள்ளன் குளத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினை இலங்கையின் பெருநிலப் பரப்பில் கிறீஸ்துவுக்கு முற்பட்ட காலப் பகுதியில் தோற்றம் பெற்றிருந்த குளநீர்ப் பாசன சமூகப் பின்னணியில் வைத்து ஆராய்வதற்கு இடமளிக்கக் கூடியவகையில் சான்றுகளைக் கையாளும் வாய்ப்புகள் மிகவும் அதிகம் என்றே குறிப்பிடவேண்டும். இங்கிருந்து சேகரிக்கப்பட்ட மட்பாண்டங்கள் பெருமளவுக்கு தனிக்கறுப்பு வர்ணத்தில் பளபளப்புத் தன்மையுடன் காணப்படுகின்றன. விளிம்புகள் மிகவும் தடித்தவையாகவும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (உடுப்பிட்டியில் இற்றைவரைக்கும் தனிக்கறுப்பு வர்ணத்தினாலான பானை வகைகளே உற்பத்தி செய்யப்பட்டு வருவதும் இங்கு நினைவு கூரத்தக்கது.)

கிறீஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் இராசரட்டைப் பிராந்தியத்தில் பொறிக்கப்பட்ட பிராமிக்கல்வெட்டுக்கள் சில 'வபிகமிக' என்ற பதத்தினையும் குறித்துள்ளதை ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். குளச்சொந்தக்காரர்களையே அப்பதப்பிரயோகம் குறித்தது என்பது ஆய்வாளரின் பொதுவான முடிபாகும். அந்த வகையில் எள்ளன்குளம் அல்லது எல்லாளன் குளம் என்ற பெயரும் அரச மட்டத்துடன் எடுத்துக்காட்டக்கூடியதாய் உள்ளமை கவனிக்கத்தக்கதாகும். இலங்கையில் கிறீஸ்த்துவுக்கு முற்பட்ட காலங்களில் குளச்சொந்தக்காரராகக் காணப்பட்டவர் பெருமளவுக்கு அரச குடும்பத்துடன் இணைந்தவராவே காணப்பட்டார். அந்த வகையில் எள்ளன்குளம் அல்லது எல்லாளன் குளம் என்ற பெயர்தொடர் குடாநாட்டின் கண் உருவாக்கப்பட்டிருந்த அரச மட்டத்திலான நீர்ப்பாசன நிறுவனமாக விளங்கியிருந்தது என நிறுவலாம். அவ்வாறு நிறுவும்பட்சத்தில் எதிர்காலத்தில் எல்லாளன் என்ற புகழ்பூத்த தமிழ் மன்னனுடைய ஆட்சிக்காலத் தொடர்புகளை யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் பிணைத்துப் பார்ப்பதற்கு வழி பிறக்குமல்லவா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிவப்பு விடியல்கள்

இருள் உதிர்ந்து விடிவவிழ்ந்து.
பிறை நிலவும் மங்கும்
கிணற்றடித் தென்னையில் குரும்பட்டி தெறிக்கும்
காவோலைக் குவியலுள் கண்மடல் விரியாத
நன்றியுள்ள ஜீவன்கள்......
மறிக்குட்டிகள் வெளித்திண்ணையில்
துள்ளிப்பாயும்
வெள்ளைச் சீருடையில் மழலைப்பட்டாளம்
சிரிப்பையும் ஏந்தியபடிக்கு;
எதிர்காலக் கனவுகளோடு......

காற்றுக் குருவிகள்
சரேலென இரைதேடித் தாழும் ..?
எங்கும் புகை மூட்டம்
வேம்பில் ஒட்டிக்கொண்டன;
சதைத் துணுக்குகள் மட்டுமல்ல
பேரினவாதத்தின் முத்திரையும்தான்.
கிணற்றடித் தென்னையில் அணில்குஞ்சு
அவலமாய் அநாதையாய்......
உடுப்புத் துவைக்கும் கல்லுடன்
மறிக்குட்டி விறைத்தபடி......
முற்றத்து நித்தியகல்யாணி சிவந்திருக்க
பிரதான வீதிமட்டும் பேச்சு அற்றுப்படுத்திருக்கும்.

சிதிலமாய் ஆகிவிட்ட வெண்புறாக்களை
கூவியபடி அம்புலன்சுகள்
அள்ளிச் செல்லும்
எங்கள் மண்ணின் காவல் தெய்வங்களும் கூடவே.
எப்பவும்தானா இந்தச் சிவப்பு விடியல்கள்...?
என்றாலும் பாடசாலையின் ஆரம்பமணி துல்லியமாய்,
ஓங்காரமாய் ஒலிக்கும்...



**இத்தாவில் க. சிவராசா**

வெளிச்சம்
கலை இலக்கிய சமூக இதழ்

வெளியீடு
விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்

உருவாக்கம்
ஆசிரியர் குழு

ஓவியங்கள்
கோபாலி

அச்சமைப்பு
ம. மரியதாஸ்

இதழ் அமைப்பு
இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலட்சியங்கள் சாவதில்லை

அன்புமகனே! இன்று ஏனோ தூக்கம் வர மறுக்கிறது. என் மனதில் மறக்க நினைக்கிற, இல்லை மறந்துவிட்டதாக எண்ணியிருக்கிற நினைவுகள் என் இதயத்தைத் தாக்கி வலிக்கச் செய்கிறது. உயிரோடு நீ செய்த குறும்புகளும் அந்த சின்னவயதிலேயே எனக்கு செய்த கடமைகளையும் நினைத்துப்பார்க்கிறேன். காவலுக்குப் போனாலும், கடுங்குளிரில் சேற்று வயலில் நடந்து வந்து என் நெஞ்சுக்கு நெருக்கமாக உறங்குவதில் தான் உனக்கு ஆசை. அப்பா இல்லாத குறை உனக்குத் தெரியக்கூடாது என்பது என் முக்கிய குறிக்கோளாய் இருந்தது. அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து தேனீர் தயாரிப்பாய். எனது தலைமாட்டில் வைத்துவிட்டு, பதினைந்து வயதிலும் என் கன்னத்தில் முத்தமிட்டு துயிலெழுப்புவாய். உன் முகத்தில்தான் காலையில் நான் விழிப்பேன். அன்றைய பொழுது எனக்கு நல்ல பொழுதாகும். அதற்காகவே நீ என் முகத்தருகே காத்திருப்பாய். என்னைத் தவறுதலாகவும் யாரும் எழுப்பினால் உனக்குப் பிடிக்காது.

ஒருசமயம் மரதன் ஓட்டப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பினாய். ஆறு மைல் ஓட உன்னால் முடியாது என்று, உன் நண்பர்கள் சொல்ல என்னிடம் வந்து அபிப்பிராயம் கேட்டாய்.

நான் 'நெப்போலியன்' கதையை சொன்னேன். 'ரொபெர்ட் பூரூஸ்' கதை சொன்னேன்.

''முடியாது என்பது மனிதனின் அகராதியில் இல்லை'' என்றேன்.

அதிகாலையில் அதற்கான பயிற்சியில் நீயும் உன் அண்ணனும் ஈடுபட்டீர்கள். உங்களை ஊக்குவிக்க காலையில் சைக்கிளில் நானும் பின்னே ஓடி வருவேன். ஊரார் கேலியாகக் கூடப் பேசினார்கள். நீ பரிசை வென்றபோது என்னைத்தான் பாராட்டினார்கள்.

உன்னால் நான் அடைந்த சிரமம் ஒன்றுமே இல்லை. ஆனால் உன் கடமைகளில் நீ எதையுமே விட்டுவைக்கவில்லை.

உழைப்பிலிருந்து படிப்பதுவரை, விளையாட்டிலிருந்து கலைகள் வரை தாயைப் போல பிள்ளை என்பார்கள்.



□□

**தமிழ்க்கவி**

உங்களுக்குத் தந்தை இல்லாத குறை, வந்ததே இல்லை ஆனாலும் கூட நீ அப்படி ஒரு பாசத்துக்கு ஏங்கினாய் என்பது எனக்குத் தெரியும்.

நீ போராடப் போவதற்கு முதல் நாள் இரவு என் மடியில் படுத்திருந்தாய். உன் அக்காள் ''இன்னும் நீ குழந்தையாடா? எழும்பு'' என்று சொல்ல:

''சாகும் வரைக்கும் நான் குழந்தை தான்'' என்றாய்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்தப் பருவத்தை நீ தாண்டவேயில்லை...

எனது இரு பக்கங்களிலும் உன்னையும் அண்ணனையும் படுக்க வைத்து, நடுவில் நான் உறங்கினாலும், உனது பக்கம் நான் திரும்பிப் படுக்கவேண்டும். இல்லாவிட்டால், பெரிய அமர்க்களம் பண்ணுவாய்.

இப்போது இருவருமே என் அருகில் இல்லை. விட்டத்தை வெறித்துப் பார்க்கிறேன். உங்கள் விழிகள் அங்கு தெரிகிறதா? என்று வெண்ணிலவு சிரிக்கிறது. இந்த நிலவுக்குத் தான் தெரியும். எழுத முடியாத என் சோகங்கள் எத்தனை என்று .....

எனக்கு அதிஷ்டம் இல்லையடா, அன்பான கணவன் கிடைக்கவில்லை. அன்பான பிள்ளைகள் கிடைத்தீர்கள். உங்களுடன் சேர்ந்து வாழத்தான் கிடைக்கவில்லை.

என் கஷ்டங்களை எல்லாம் நீக்க நீங்கள் முன் வந்தபோது இந்த தாயிலும் மேலான இலட்சியம், உங்களைத் தன்னோடு சேர்த்துக் கொண்டது.

தமிழீழத் தாய்க்கு என் பிள்ளைகள் கொடி ஏற்றப் போய் விட்டீர்கள் என்ற மகிழ்ச்சி எனக்கு திருப்திதான் என்று என் மனதை சமாதானம் செய்து கொள்கிறேன்.

காலம்தான் எவ்வளவு வேகமாகப் போகிறது. மனதில் சுமைகளைக் களைந்து விட்டோம் என்ற நிலைமாறி கண்களின் ஈரம் காயமுதல், புதிதாக அங்கு பிசுபிசுத்தது ஈரம் குருதியாக.

பிரச்சனைகள் தோன்றும் போதெல்லாம் ஓடி வந்து ஆலோசனை கேட்டான் ஒருவன்.

பிரச்சனைகள் உன்னை தீண்டவிடவே மாட்டேன் என்றான் ஒருவன். 'காலை முதல் மாலை வரை' காலைச் சுற்றி வந்தான் ஒருவன். கடைசிவரை நானாவது உன்னோடு இருப்பேன் என்றான் ஒருவன் இன்று தனிமையில் இவற்றையெல்லாம் எண்ணி.

வாழ்க்கையின் இன்பமெல்லாம் அதன் வசந்த காலமான இளமையில் தான் தங்கியுள்ளது. கொடுமைகளிலெல்லாம் பெரிய கொடுமை வறுமை தான். 'அதனிலும் கொடிது இளமையில் வறுமை' என்று ஔவை கூறிய வாக்கு எவ்வளவு உண்மை.

எனது வாழ்க்கையின் இளமையைப் பேயாட்டம் போட்டு, உருக்குலைத்த வறுமை, என் பிள்ளைகளைத் தீண்டக் கூடாது என்று நான் தீவிரமாய் இருந்தேன். உங்களைசோர்வற்ற உழைப்பாளிகளாக்கினேன்.

உழைப்பு, உழைப்பு, கடின உழைப்புக்கு நிகர் எதுவுமே இல்லை. வறுமையைத்தாங்க முடியாமல் நாலு குழந்தைகளுடன் என்னைக் கைவிட்டுவிட்டு ஓடிப்போன, என் கணவனை எண்ணி நான் கண்ணீர் விட்டதுண்டு. வறுமை என்னை சிந்திக்க விடவில்லை. சிந்திக்க நேரமில்லை. அடுத்த வேளை உணவு, குழந்தைகளின் பசி பூதாகரமாய் என் முன் காலை எட்டு மணிவரை சொந்த நிலத்தில் வேலை. எட்டு மணி முதல் மாலை வரை கூலி வேலை — இரவில் தையல். தனிப்பட்ட கல்வி வழங்கல்... .. (ரீயூசன்)...... நேரசூசி ஓடிக் கொண்டிருந்தது.

நாலு வயதில், எட்டு வயதில், பத்து வயதில், பன்னிரண்டு வயதில், நாலு பிள்ளைகளும், பாடசாலை நேரம் போக மீதி நேரம் ஆடு மேய்க்கவும், கோழிகளைப் பார்க்கவும், தோட்டத்துக்கு நீரூற்றவும், உதவினீர்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இயன்றளவு கடுமையாக உழைத்தேன். சேமித்தேன். வசதிகளை உருவாக்கினேன்.

பிள்ளைகள் வளர்ந்தார்கள். என் எட்டு வருட உழைப்பின் பலன்.

''அம்மா இனி நீங்க கூலி வேலைக்குப் போகக் கூடாது. வயல் உழவு நான் செய்வன். நான் இனிப் பள்ளிக்கூடம் போகமாட்டன்'' என்றான் மூத்தவன்.

''என்னால இதை தாங்கேலா, நீ படி உங்களை உருவாக்கி காட்டுறதெண்டு நான் சபதம் போட்டிட்டன்''.

''ஆரோட''

''இந்த உலகத்தோட''

''உலகம் . பெரிய உலகம் நாளைக்கு வேண்டாம் இண்டைக்கு இந்த உலகமே எங்களை காப்பாற்றினது'' என்றவன் தொடர்ந்து அப்பா ''விட்டிட்டு போக, உங்களைப் பற்றி என்னவெல்லாம் சொன்னது இந்த உலகம்''

மெய்தான். என்னையும் என் பிள்ளைகளையும் எதிர்காலக் கனவோடு உருவாக்கியபோதும் இதை உலகம் நேரிய கண் கொண்டு நோக்கவில்லை என்பதை நானறிந்தேன். ஆரம்பத்தில் மனம் கொதித்தது. துவண்டது. என் தூய்மையை சந்தேகித்த உலகை நான் வெறுத்தேன். அதைத் துறந்து விட முயன்றேன்.

அந்தப் பாதையிலும், குறுக்கே தடைச் சட்டமாக என் மழலைகள். அதைத் தாண்டும் துணிவு எனக்கில்லாத போது, அவற்றைத் தாங்கும் துணிவை வலிந்து பெற்றேன். 'பெண்களின் விலங்குகள் உடைக்கப்பட வேண்டும். அவள் பீறிட்டெழும் வெள்ளமாக அலைகளை உடைத்து வெளியே பாயவேண்டும்'' என்றெல்லாம் பேசும் சமூக நலன் வாதிகளாலும் கூட, ஒரு பெண்ணின் ஆக்ரோசமான வெளியேற்றத்தை பொறுத்துக் கொள்ள முடிவதில்லை என்பதை அனுபவத்தில் அறிந்தேன்.

சுற்றுப்புறம் முழுவதும் அலை அலையாய் எழுந்து என்னைத் துளைத்த அவமானத்துக்குரிய வசை மொழிகளை என்னால் சீரணிக்க முடியாமல் எவ்வளவு வேதனைப்பட்டேன். பெண்கள் எவராலுமே நான் உழைத்து முன்னேறுகிறேன் என்பதை உலகுக்கு நிரூபிப்பது கஷ்டம் என்பதை உணர்ந்தேன்.

என் பிள்ளைகள் உப்புக்கற்களல்ல; வைரக்கற்கள். தன்மானம். ஆம் ''மண்மீது மானம் ஒன்றே பிரதானம்'' என்ற பாடல் அடிக்கடி கூறும். என்னிடம் என் பிள்ளைகள் எவ்வளவு மதிப்பும் பாசமும் கொண்டிருந்தார்கள். அன்று, அளவற்ற மகிழ்ச்சியில் திளைத்தேன். பிடிவாதமாக தன் கல்வியை நிறுத்தி ''உன்னை உட்காரவைத்து காப்பாற்றப் போகிறேன் இதைவிட எனக்கு வேறு லட்சியமே இல்லை'' என்று சாதித்தவன். என்னை உட்கார வைத்துக் காப்பாற்றிய போது நான் இந்த உலகையே மறந்தேன். ஆனால் உலகம், இயற்கை, விதி, வேறு விதமாய் சிந்தித்தது.

''அம்மா ...'' தயக்கத்தோடு அருகில் வந்தான் அவன்- காலையிலிருந்தே வேலைக்குப் போகாமல், என்னையே சுற்றிக் கொண்டு, இவன் என்ன சொல்ல நினைக்கிறான்?

ஏறிட்டுப் பார்க்கிறேன். ''சொல்லன்ரா என்ன?''

அவன் மெதுவாக என்னுடன் ஒட்டிக் கொண்டு, என் தோள் மீது கையைப் போட்டு, என் மீது சாய்ந்து கொள்கிறான்.

விசயம் பெரிதோ? ஏதாவது செலவுக்குரியதோ? புதுவகை சேட்டோ? அல்லது படமோ? எதுவோ? தேவைப்படுகிறது. உழைப்பதெல்லாம் ஏழைத்தாயிடம்

www.tamilarangam.net



கொடுத்து விட்டு, தன் சொந்தத் தேவைகளுக்கு கெஞ்சிக்கொண்டு வருவது அவன் வழக்கம் தானே. எனக்குள் சிரித்துக் கொண்டேன்.

"அம்மா நான் ஒண்டு கேப்பன் கோவிக்காமல் சரியெண்டு சொல்லுங்கோ என்ன..."

"சொல்லடாப்பா முதல் விசயத்தை"

"வந்து .. கொஞ்சப் பெடியள் போறாங்கள் நானும் வாறனெண்டு சொல்லிப் போட்டன்"

"எங்கை?"

"பொடியளோட சேர"

ஒருதடவை பிரளயமே எனக்குள் உருவாகி, தானாக அடங்கியது. என்னை நிதானப்படுத்திக் கொண்டு சொன்னேன்.

"என் பிள்ளை தேசம் காண விளைவது எனக்குப் பெருமைதான். அண்ணன் வறுமை காரணமாக படிப்பை விட்டான். நீயும் என் கஷ்டங்களைப் போக்க வென்றே உழைக்க முன் வந்தாய். உங்கள் தம்பிகள் உன் உழைப்பில்தான் படிக்கிறார்கள். தம்பிக்கு மார்கழியில் பரீ - இப்ப ஐப்பசி. நீ போனால், அவனது படிப்பும் போய்விடுமே. ஒருவனாவது படித்து, உன் பெயர் சொல்ல மாட்டான் ... அண்ணன் என்னைப் படிப்பித்தான் என்று. பரீட்சை முடிந்த பின் போகலாம்" என்றேன்......

"அவன் மௌனமானான்" அதுவே அவனுக்கு எமனாயிற்று.

சுழன்றடித்த சூறாவழியில் என் குடும்பமும் சிக்கியது. மாலையில் விளையாடப் போனவன், தேசத்துரோகிகளின் துப்பாக்கி துப்பிய குண்டில் இரையாகிப் போனான். அந்த உடலைக் கூட......

அன்று புறப்பட்டு இயக்கத்தில் இணைந்த கிளியன், அர்ச்சுன், செல்வன், சுதா, சூரி எல்லாரும் ... எல்லாரும் .. எல்லாரும் ஆனால் நீ .. உன் நிழலில்... நான் அன்று இமைப்பாற எண்ணி, விட்ட தவறை மீண்டும் செய்யக்கூடாது என்பதால், உன் தம்பியை நானே அனுப்பி, நீ விரும்பிய அந்த தேசத்தை வெல்ல, உன் லட்சியத்தை முளையிலேயே கருக்கிய, அந்த மூடருக்கு புத்தி புகட்ட முயன்றேன். அந்த முயற்சியில் அவன் வென்று விட்டான். அந்தஉடல் கூட...... ஆனையிறவில்.

பெண் எப்போதும் காலம்காலமாக பிறரில் சார்ந்து நிற்பவள் என்ற கருத்தை உடைத்தேன். உழைத்தேன். நிமிர்ந்தேன். உங்களை உருவாக்கினேன். ஆனால் பெண்ணுரிமை பேசும் உலகில் என் தன்னிறைவை உலகம் ஒப்பவில்லை. அதனால் உன் தம்பியின் மரணச் செய்தி கூட, காலம் கடந்து தான் என்னைச் சேர்ந்தது.

"கந்தையா ராகவன் ஆனையிறவுச் சமரில் வீரச்சாவு" செய்தி எங்கெல்லாமோ அலைந்தது. பார்வதி பெற்ற ராகவனின் சாவு கந்தையாவை தேடி...... தந்தையை துரோகிகளின் ஆக்கிரமிப்பில் சுகமாக வாழும் அந்த தந்தையை தேடிச் செய்தி காத்திருந்தது. (பெண்ணுக்கு வழங்கப்பட்ட உரிமை இவ்விதி) தன்னை உருக்கி, வளர்த்ததாய் அந்நியமாய், காலம் கடந்து .. உன் தம்பியை உயிரோடு இருப்பதாய், தேடியலைந்து பல மாதங்களின் பின் இன்று தான் அவனைப்பற்றி ... அவன் சாவைப்பற்றி ..

எனக்குள் வெறி கிளர்ந்தது. உலகமே நீங்கள் தானே. உங்கள் லட்சியம், உங்கள் கொள்கை, உங்கள் ஆயுதம் .. உயிரோடு, அவற்றை சுமக்க நாங்கள் - ஆம் நாங்கள் நீ காண விரும்பிய, காணத் துடித்த அந்த தேசத்தின் விடிவு உன்னுடையது. அழிவில், உன் தம்பியின் அழிவின் மீது சமாதி கூட ஏன் சாம்பல் கூட இல்லாத நிலையில் சாத்தியப்பட்டு, போயுள்ளது. என் இனிய செல்வமே உன் ஆத்மாவின் துடிப்பு என் அந்தரங்கத்தில் ஒலித்துக் கொண்டே இருக்கும். இது தானே என் உயிர் மூச்சு. உங்களைச் சுமந்த தோளில் துப்பாக்கி. 'உன்னை அணைத்த மார்பில் துப்பாக்கியின் ரவைக் கூடு. எனது கால்கள் உனது பாதையில் ஓடி வருகிறது. □□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்கள் அச்சுப் பதிப்புத் தேவைகள் அனைத்தையும்
எழிலாகவும், விரைவாகவும் நிறைவேற்றும் நிறுவனம்

ஏ. எஸ். ஜே. பிரின்ரிங் வேக்ஸ்

காங்கேசன்துறை வீதி, மல்லாகம்.

www.tamilarangam.net

இமயத்தில் **சிகரம்** எவரெஸ்ட்
ஈழத்தில் பனைவளம்

"பனைவளம் காத்து பயன் பலபெறுவோம்
உள்ளூர் உற்பத்திகளுக்கு ஊக்கமளிப்போம்"

பனைவளத்திலிருந்து......

தரமானதும்
சுத்தமானதும்
சுவையானதுமான பனைவெல்லம், பதநீர்,

உறுதியானதும்
மலிவானதும்
நேர்த்தியாகத் தயாரிக்கப்பட்டதுமான
கைப்பணிப்பொருட்கள்,

மற்றும்

**பனை சார் உற்பத்திகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய இடம்**

பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்,
பளை,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்